# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

**VOLUME - 2** **Reg NO.TNBIL/2016/70171** **ISSUE - 4**

**APRIL 2018 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

நம் தேவன் ஜீவிக்கிறார். ஆகவே நாமும் ஜீவிக்கிறோம்.

இந்த மாதத்தில் பெரும்பாலான வாசகர் குடும்ப பிள்ளைகளுக்கு பரீட்சை நடந்து முடிந்து நீண்ட விடுமுறை நாட்களை அனுபவிக்கப்போகிறார்கள். வருகிற மாதத்தில் எல்லா இடங்களிலும் **சிறுபிள்ளைகளுக்கான விடுமுறை வேதாகம பள்ளி** நடைபெறும் என்று நம்புகிறேன். நம் பிள்ளைகளை நீங்கள் அனுப்பும்போது உங்கள் வீட்டின் அருகேயுள்ள புற மதத்தினரின் பிள்ளைகளையும் VBSல் பங்குக்கொள்ள ஏற்பாடு செய்யுங்கள். அந்த பிள்ளைகளும் இயேசுவை அறிந்துக்கொள்ளட்டும். சிறு பிள்ளைகளில் விதைக்கும் **விதை** என்ற ஊழியம்தான் **கன்வென்ஷன் பிரசங்கத்தைவிட,மிஷனரி ஊழியத்தைவிட** சிறந்தது ஆகும். **விதை வளர்ந்து ஆலமரமாகும்.**

1964,1965ம் வருடங்களில் நாங்கள் தமிழ்நாடெங்கும் நடத்திய VBS ஊழியத்தில் காலை டிவோஷன் சமயத்தில் VBS டைரக்டர்களான நாங்கள் நிகழ்த்திய கால்மணி நேரம் பிரசங்கத்தில் தொடப்பட்ட VBS **ஆசிரியைகளாக** உதவிய அக்காமார்கள், அண்ணன்மார்கள் இன்று பல்வேறு இடங்களில் பெரிய **ஊழியர்களாக, ஆயர்களாக,** EUவிலும் **ஊழியர்களாகி** ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தியுள்ளார்கள். அன்று நாங்கள் பொருப்பெடுத்த VBS ஊழியத்தில் பிள்ளைகளைவிட அவர்களுக்கு சொல்லிகொடுக்கும் VBS **டீச்சர்களின்** இரட்சிப்புக்காகத்தான் நாங்கள் மிகவும் **கவனம்** செலுத்துவோம்.

**இவர்கள் மனந்திரும்பினால்** திருச்சபையின் ஆவிக்குரிய காரியங்களுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவர்களாக இருப்பார்கள்.

# APRIL 2018

# வாலிப பிள்ளைகளுக்கான கூட்டங்கள்:

அப்படியே ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தில் உள்ள **வாலிப பிள்ளைகளை** எங்கெங்கு வாலிபர்களுக்கான **விசேஷ கூட்டங்கள்** நடைபெறுகிறதோ அந்த கூட்டங்களில் நான்கு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் தங்கி அந்த கூட்டங்களில் கலந்துக்கொள்ள ஜெபத்தோடு அவர்களை அனுப்புங்கள். வாலிபர்களுக்கும், வாலிப பெண்களுக்கும் சேர்த்து இணைந்து நடத்தப்படும் கூட்டத்துக்கு **அனுப்ப வேண்டாம்** இருபாலருக்கும் ஒரே இடத்தில் தனித்தனி கூட்டங்களாக நடத்தினாலும் அக்கூட்டங்களை தவிர்த்து **பெண்களுக்கான** கூட்டத்துக்கு உங்கள் வீட்டில் உங்கள் சபையில் யாராவது பெரிய பெண்களுடைய துணையுடன் உங்கள் பெண்பிள்ளைகளை அனுப்புங்கள். BYM(Blessing Youth Mission) இயக்கத்தினர் ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டில் **சித்தேரி** மலையில் வாலிப பெண்களுக்கான கூட்டம் **Dr.லில்லியன் ஸ்டேன்லி**,MBBS,DCH அவர்களும், மற்ற பல சகோதரிகளும் இக்கூட்டங்களை மிகச்சிறப்பாக நடத்துகின்றனர்.

அப்படியே வாலிபர்களுக்காக சகோ.**ஸ்டான்லி** (நல்ல பைபிள் டீச்சர்) அவர்களுடன் சகோ.**லைனல்** அவர்களும் சிறப்பு கூட்டம் நடத்துகிறார்கள். பல வாலிப பெண்கள், வாலிபர்கள் இக்கூட்டங்களில் இரட்சிக்கப்பட்டு சாட்சியுடன் வாழ்வதை நான் அறிந்திருக்கிறேன்.

அதேபோல் FMPB மிஷனரி ஸ்தாபனத்தினர் இதே போன்ற கூட்டங்களை பல்வேறு இடங்களில் நடத்துகிறார்கள். இதில் தொடப்பட்ட வாலிபர்கள்,வாலிப பெண்கள் ஏராளம். இவர்கள் நடத்திய கூட்டங்களில் தான் என் மகள் இரட்சிக்கப்பட்டார்.

மற்றபடி ஆல்வின்தாமஸ், **ஆலன்பால்,இயேசு அழைக்கிறார், ஏஞ்சல் டிவி, இயேசு விடுவிக்கிறார் மோகன் சி.லாசரஸ்** போன்று இன்னும் பலர் வாலிபர்களுக்கான கூட்டம் நடத்துவதுண்டு. அங்கு அனுப்பிவிடாதீர்கள். **ஆறுதல் கிடைக்கும். பரீட்சையில் வெற்றி** கிடைக்கும், **தீர்க்கதரிசிகளாவார்கள்** போன்ற **செழிப்பு உபதேசமும், ஆறுதல் உபதேசமும், அந்நியபாஷை** எப்படி பேசுவது என்பதையும் வாலிபர்களுக்கு கற்றுக் கொடுத்து வாலிபர்களை வசனத்திலிருந்து பிரித்துவிடநேரிடும்.

அடுத்தது, நம் பிள்ளைகளை வாலிப ஆவிக்குரிய கூட்டத்துக்கு அனுப்பிவிட்டு பெற்றோர்கள் வீட்டில் பிள்ளைகளுக்காக ஜெபிக்கவேண்டும். இக்கூட்டத்தின்மூலம் என் பிள்ளை இரட்சிக்கப்படவேண்டும் என்று உபவாசித்து ஜெபியுங்கள். பிள்ளைகளை கூட்டத்துக்கு அனுப்பிவிட்டோம். கடமை தீர்ந்தது என்று நினைத்துவிடக்கூடாது. பெற்றோரின் உபவாச ஜெபம் பிள்ளைகளை மனந்திரும்ப வைக்கும். பிள்ளைகள் மனந்திரும்பினால் அவர்கள் கல்லூரியில் படித்தாலும், வேலையில் சேர்ந்தாலும் கர்த்தரை மறக்காமல் பெற்றோருக்கு சந்தோஷம் கொடுக்கும் பிள்ளைகளாக மாறுவார்கள்.

இன்று ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகள் பெற்றோரை அழ வைக்கிறார்கள். பிள்ளைகளைக்குறித்து பெற்றோரின் பாச உணர்வும், பிள்ளைகள்மேல் வைத்த அன்பும் மாறாதிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள பிள்ளைகளுக்கு பெற்றோர்மீது மாத்திரமே அன்பு உண்டு. **பாசம் இல்லை.** அதனால் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் தங்கள் சுதந்திரன்படி தெய்வத்தை மறந்து ஜீவிக்கிறார்கள்.

உங்கள் பிள்ளைகளுக்காக நானும் தொடர்ந்து ஜெபிக்கிறேன். உங்கள் பிள்ளைகளின் தேர்வுக்காக நான் ஜெபித்ததை போல் உங்கள் பிள்ளைகளின் இரட்சிப்புக்காக, மனந்திரும்புதலுக்காகவும் ஜெபிக்கிறேன்.

இம்மாத பத்திரிக்கையின் ஒரு பகுதியை **மனவேதனையுடன்** எழுதினேன். மற்றொரு பகுதியை **சந்தோஷத்தோடு** எழுதினேன். முதலாவது **ஏஞ்சல் டிவி, மோகன் சி.லாசரஸ், வின்சென்ட் செல்வகுமார்** இவர்களின் பிழையான உபதேசங்கள், தீர்க்கதரிசனங்கள் **சாது செல்வராஜ்** அவர்களைப்பற்றியும், அவரின் ஏஞ்சல் டிவியைப்பற்றியும், சாட்சியில்லா பல சம்பங்களைப்பற்றியும் இம்முறை ஜாமக்காரனில் வெளியிட நேர்ந்தது. இது மனவேதனையை கொடுக்கிறது.

இரண்டாவது, டாக்டர்.**பில்லிகிரஹாம்** அவர்களின் சிறப்பான ஊழிய சாட்சி ஆரம்பம் முதல் - அவரின் மரணம்வரை **எந்த பாவத்திலும், பணஊழலிலும் விழாமல் பிழையான உபதேசததை** கூறி மக்களை வசனத்தை விட்டுவிலகிவிடாமல் தன் தெளிவான வேத உபதேசத்தில் நிலையாய் நின்று **வெற்றியுள்ள ஓட்டத்தை முடித்தாரே** அதைக்குறித்து எழுதியது என் பாக்கியமாக கருதுகிறேன்.

இந்த இரண்டையும் வாசகர்கள் வாசித்து நலமானதைப்பற்றி கொண்டு நம் யாவரின் ஊழியமும்,மரணமும் டாக்டர்.பில்லிகிரஹாம் அவர்களைப்போன்று அமைய வேண்டும் என்று ஜெபிப்போம்.

வாசக குடும்பங்களுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து நான் ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தரின் பணியில்
**டாக்டர்.புஷ்பராஜ்**

## TIRUNELVELI DIOCESE( A UNIT OF TDTA)
## டையோசிஸ் கன்வென்ஷன்

நீண்ட காலஇடைவெளிக்குபின் TDTA திருநெல்வேலி டையோசிஸ்கள் அனைத்து சபைகளும் இணைந்து நடத்தும் **இந்த கன்வென்ஷனில் பிரசங்கிக்க அழைக்கப்பட்டிருக்கிறேன். திருநெல்வேலி** சபைகளின் விசுவாசிகள் எந்த மாநிலத்திலிருந்தாலும் இக்கூட்டங்களுக்காக ஜெபம் ஏறெடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

திருமண்டலத்தின் **முன் நாட்களின்** பிரச்சனைகளோ **தற்கால** பிரச்சனைகளைப் பற்றியோ மறைமுகமாககூட யாரும் பேசாதபடி திருமண்டலத்தில் ஆரம்பகாலத்தில் இருந்த **ஐக்கியம் அன்பு,ஜெப ஐக்கியம்,** இவைகளை **திருநெல்வேலி திருமண்டலம்** திரும்ப பெறவேண்டும். அனைத்து Tirunelveli Diocese(A Unit of DTA) சபைகளிலும் கிறிஸ்துவின் **அன்பு,சகிப்புதன்மை, சமாதானம்** பெறவேண்டும். கர்த்தாவே, **திரும்ப எங்களை உயிர்பிக்கமாட்டீரோ** என்ற கண்ணீர் நம் ஒவ்வொருவரிடமும் பெருகவேண்டும்.

தென்இந்தியாவின் அனைத்து டையோசிஸ்களிலேயே மிக ஆழமான ஆவிக்குரிய அனுபவங்களும், மிஷனரி பாரமும் நிறைந்த ஒரு **மாதிரி மாநிலமாக** அமைந்த **திருநெல்வேலி திருமண்டலம்** தன் **ஆரம்ப காலத்துக்கு** திரும்பவேண்டும். இந்த பெரும் பாரத்தை மனதில் பல வருடங்களாக சுமந்துக்கொண்டிருப்பதாலேயே இந்த டையோசிஸ் கன்வென்ஷனுக்கு பிரசங்கிக்க சம்மதித்தேன்.

**2018 மே மாதம் 25,26 & 27 தேதிகளில் இக்கூட்டங்கள் நடைபெறும்.** மற்ற விவரங்களை அறிய தொடர்புக்கொள்ள : **Rev.SELVINRAJ - Mob: 9443184572**

# உபத்திரவக்காலம் தொடங்கிவிட்டது

கிறிஸ்தவ சபைகள்,ஊழியர்கள் **இந்து முன்னனி** ஆட்களால் துன்புறுத்தப்படுவதை நீங்கள் **பத்திரிக்கையிலும், வாட்ஸ்அப்பிலும்** கண்டிருப்பீர்கள். இது **மதுரை** மாநகரில் பட்டபகலில் **கூடல் நகர்** என்ற இடத்தில் ஒரு ஏழை சபை(பெந்தேகோஸ்தே சபை) **பாஸ்டர்** தாக்கப்பட்டார். பாஸ்டர் மனைவி தாக்கப்பட்டு இப்போது நான் இதை 16ம் தேதி மார்ச் (பெங்களூர் UTC Rest Houseல் தங்கி எழுதிக்கொண்டிருக்கும் இந்த நாள்வரை அந்த சகோதரி ஆஸ்பத்திரியிலிருந்து வெளி வரவில்லை. ஜெபிப்போம்.

அதே வாரம் தமிழ்நாட்டில் மற்றொரு சபையில் இந்து முன்னனியினர் ஆலயத்தில் புகுந்து **வேத புத்தகத்தை** தீயிட்டு கொளுத்தியுள்ளார்கள்.

இதை டிவியில் அரசியல் தலைவர்களில் ஒருவரான திரு.**வை.கோ** அவர்கள் மிக காட்டமாக இந்து முன்னனியினரை கண்டித்து தீ வைத்து கொளுத்தப்பட்ட வேத புத்தகத்தை கையில் எடுத்துக்காட்டி கண்டித்துள்ளார். நம் தமிழ்நாட்டு அரசாங்கம் **காவி கட்சிக்கு** பின்னால் பயந்து ஒளிந்திருக்கிறபடியால் நம் தமிழ்நாட்டில் ஒரு **மந்திரியாவது** MLA மற்றும் MPக்கள் யாரும் இதை எழுதும் நாள் வரை கண்டித்து பேசவில்லையே. இவர்களுக்கு பேசும் தைரியம் இல்லாமல் போனதே - எதற்கும் லாயக்கற்றவர்களான இவர்களின் **ஆட்சி எப்போது ஒழியுமோ** என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். **கர்த்தர் அமைதியாக இருக்கிறார்** என்று எண்ணாதிருங்கள்.

## இந்தியா இந்துக்களுக்கே:

**ஒரே மதம், ஒரே மொழி** என்ற கொள்கையுடன் வெற்றி பெற்ற **காவி ஆட்சியான** BJP ஆட்சி. மேலே வாசித்த சம்பவம் நடந்த மறுநாளே மூன்று மாநிலங்களில் நடந்த இடைத்தேர்தலில் **பெருத்த தோல்வியை** அடைந்தது என்ற செய்த நாளேட்டிலும், TVயிலும் கேட்கும்போது **தெய்வம் கிரியை செய்ய** தொடங்கிவிட்டார் என்று அறியமுடிகிறது.

### முதலில் அவர்கள் என்னைத்தான் பகைத்தார்கள்:

இயேசுகிறிஸ்து கூறினார். **உலகம் உங்களை பகைத்தால் அது உங்களை பகைக்கிறதற்கு முன்னே- என்னை பகைத்தது** என்று அறியுங்கள் என்றார். என்ன ஆறுதலான வார்த்தை இது. **ஊழியர்கள்,மிஷனரிமார்கள்** இப்படிப்பட்ட வெறியர்களால் பகைக்கப்படும்போது தாக்கப்படும்போது சோர்ந்துபோகவேண்டாம். அவர்கள் உங்களையல்ல **இயேசுவையே பகைத்தார்கள்** என்று அறியுங்கள்.


**முள்ளில் உதைக்கிறது உனக்குதான் பாதிப்பு** என்றார் இயேசு. அப் 9:6.

**காவி கட்சிக்கு** உடனே அடி கிடைத்தது!. **உ.பி.** மாநிலத்தின் முதல்வர் ஒரு **இந்து மத வைராக்கியம்** அல்லது வெறிகொண்டவர். இவர் தொகுதியில் 5 முறை ஜெயித்து அந்த தொகுதி BJPயின் கோட்டை என்று கூறப்பட்டது. ஆனால் நேற்று அந்த இடைதேர்தலில் படுதோல்வி ஏற்பட்டது. 3 இடத்தில் நடந்த இடைதேர்தலில் தேர்தல் நடந்த எல்லா இடத்திலும் BJPக்கு பெருத்த

தோல்வி ஏற்பட்டது. தேசத்தை ஆளும் **MPமார்களின்** எண்ணிக்கை BJPக்கு குறைந்துகொண்டே வருகிறது. 40 MP**க்கள்** தமிழ்நாட்டில் **அஇஅதிமுக** கட்சியினருக்கு உண்டு. ஆகவே தமிழ்நாட்டை ஆளும் மந்திரிகள் **எத்தனை ஊழல்** செய்தாலும் திரு.**மோடி** அவர்கள் தமிழ்நாட்டு ஆளும்கட்சியை பகைத்துக்கொள்ளமாட்டார்கள். மோடிக்கு MPக்களின் தயவு மிகவும் தேவை. ஆகவேதான் தமிழ்நாட்டு மந்திரிகள் **இஷ்டம்போல ஆட்டம்** போடுகிறார்கள். கோமாளித்தனமாக பேசுகிறார்கள். **எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு** என்று வேதம் கூறுகிறது. இவர்கள் ஆட்டத்துக்கும் ஒரு முடிவு உண்டு. ஜெபிப்போம்.

## சட்ட உதவிக்கு இலவசமாக உதவும் வக்கீல்கள்:

**இந்து முன்னனி தீவிரவாதிகளால் சபைகள் தாக்கப்பட்டலோ, ஊழியர்கள் தாக்கப்பட்டலோ காரணமில்லாமல் கிறிஸ்த ஊழியர்கள் அல்லது விசுவாசிகள் காவல் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டால் கீழே காணும் தொலைபேசி வழியாக தொடர்புக்கொண்டால் கீழே எழுதப்பட்ட தகவல் செய்தியில் காணப்படும் நபர்கள் உங்களுக்கு தேவையான உதவிகள் செய்ய காத்திருக்கிறார்கள். இரண்டு வருடத்துக்குமுன் சட்ட உதவி என்று தொலைபேசி எண் கொடுத்தவர்கள் கவலையீனமாக இருந்ததுபோல் இம்முறை அத்தகைய தவறு நடக்காது என்று நம்பலாம். சட்ட உதவி தொலைபேசி எண்கள்: 18002084545 ஆகும்.**


TOLL FREE NUMBER for Christians in the country is launched. PLEASE pass it to as many CHRISTIAN people and Pastors as possible. The number is 18002084545. This is the number to be CONTACTED in case of any ATTACK on CHURCH, prayer meeting or a Convention.

http://www.instagram.com/joseph_mohanty

A GROUP of Christian Lawyers and influential people connected to the"UNITED CHRISTIAN FORUM" will come forward for immediate help! Kindly pass on this VALUABLE information!!!

1:05 AM

## உச்சநீதிமன்ற தீர்ப்பை எழுதி வைத்துக்கொள்ளுங்கள்:

மத சார்ப்பற்ற ஒரு அரசங்கம் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்காத பாதுகாப்பு இந்திய உச்சநீதிமன்றம்(சுப்ரீம் கோர்ட்) கொடுத்துள்ளது. கர்த்தர் இப்படிப்பட்ட புற மதங்களை சேர்ந்த நீதிபதிகள் கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்ததைக்குறித்து கர்த்தரை துதிப்போம்.

கிறிஸ்தவ சபைகளுக்கும்,ஊழியர்களுக்கும் பாதுகாப்பு தரும்படி நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவிடம் தினமும் ஜெபிப்போம்.

உச்ச நீதிமன்றத்தின் அதிரடி தீர்ப்பு......கிறிஸ்தவர்களை மதத்தின் பெயரால் துன்புறுத்தினால் 10 ஆண்டு ஜெயில்.......இந்தியா ஒரு மதசார்ப்பற்ற ஜனநாயக நாடு..........கிறிஸ்தவர்களை ஒடுக்க யாருக்கும் அதிகாரமில்லை.......pls forward all to our christian brothers&sisters.....

Supreme court declares the final judgement that No one can not right to Harmfull to the christian and cannot scoff the worship of christian God,
No one should not Attacking the christians.If any one break the Rules or Neglected the Rules of Indian Govt ( supreme court ) Rules and Regulations They could be Punishable and imprisoned for 10 years with non - Bailable

THE COUNCIL BOARD OF RELIGIONS

*Christians will have their freedom in their deity.*
*According to the constitutional rights anyone who objects any religion*

# ஏஞ்சல் டிவி(ANGEL TV)யின் மூவரணி உடையக்காரணம் என்ன?



## (சகோ.சாது செல்வராஜ் - நாலுமாவடி சகோ.மோகன் சி.லாசரஸ் - சகோ.வின்சென்ட் செல்வகுமார்)

மேலே வாசித்த **மூன்றுபேரும் வேதத்தில் இல்லாததை** தீர்க்கதரிசனங்கள் என்று கூறி ஏஞ்சல் டிவியில் அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்று மூவரும் ஒன்றுபோல் போதித்தார்கள். **சகோ.வின்சென்ட்செல்வகுமார்** அவர்கள் **கர்த்தர்** தனக்கு மட்டும் காண்பித்ததாக கூறிய **தீர்க்கதரிசனத்தை** வேத புத்தகத்தைப்போல பைண்ட் செய்து வேதத்தில் இல்லாத அந்த தீர்க்கதரிசனத்துக்கு மற்ற இருவரும் இணைந்து ஏஞ்சல் TVயில் விளக்கம் கொடுப்பது எத்தனை துணிகரம்.

**அத்தனையும் பொய்யான, கற்பனை தீர்க்கதரிசனம் ஆகும்.** அதற்கு சகோ. **மோகன் சி.லாசரஸ்** அவர்களும் மற்ற இருவருடன் இணைந்து விளக்கம் கொடுப்பது என்பது எத்தனை அபத்தம். அவருடைய **இயேசு விடுவிக்கிறார்** நிர்வாக Bபோர்டில் உள்ளவர்களும், அவர்களுடன் **மோகன். சி.லாசரஸ்ஸை** தனிப்பட்ட முறையில் நேசிப்பவர்களும்கூட இணைந்து அந்த டிவி சம்பாஷைனகளை எதிர்த்தார்கள். அவர்களோடு குறிப்பாக **சாது செல்வராஜ்**(ஏஞ்சல் டிவி-Angel TV) முதலாளி அவர்களோடு நீங்கள் ஐக்கியம் வைக்கவேண்டாம் என்று எழுதி எச்சரித்தும், அவர் கேட்கவில்லை.

**மோகன் சி.லாசரஸ்க்கு** கடிதம் எழுதிய அத்தனைப்பேரும் எழுதிய கடிதத்தின் நகல்களை எனக்கும் அனுப்பினார்கள். இதிலே கவனிக்க வேண்டியது டிவியில் சம்பாஷனை நடத்திய இவர்கள் யாவரும் **பொய் பேசுகிறவர்கள்** என்பதை உறுதி செய்யும் வண்ணமாக **சகோ.மோகன் சி.லாசரஸ்** அவர்கள் அதே சம்பாஷையில் பகிரங்கமாக அறிவித்த சாட்சி உறுதிப்படுத்தியது. ஏஞ்சல் TVயில் இவர்கள் பேசிய **தவறான சம்பாஷனைகளை** என் ஜாமக்காரன் வாசகர்கள்(மும்பை, சென்னை) அப்படியே டிவியிலிருந்து CDயில் டவுன்லோடு செய்து எனக்கு அனுப்பினார்கள்).

**வின்சென்ட்செல்வகுமாரின் தீர்க்கதரிசனம் பொய்யானது ஆகும். மேலும் அதற்கு மோகன் சி.லாசரஸ் விளக்கம் கொடுக்கிறார் என்றால் அதுவும் பொய்தானே!.**

**இந்த மூவரின் நண்பர் ஒருவர் இப்படி எழுதினார்:** அவர் பத்திரிக்கையில் எழுதாததை நான் ஜாமக்காரனில் திருத்தி பொய்யாய் எழுதி ஜாமக்காரனில் வெளியிட்டதானால் **டாக்டர் என்னை அவமானப்படுத்திவிட்டார்.** அதனால் **என் ஊழியம் பாதிக்கப்பட்டுவிட்டது.** ஆகவே **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் எனக்கு **மானநஷ்டமாக** (ஒரு பெரும் தொகையை இழப்பீடு தொகையாக குறிப்பிட்டு) அந்த தொகையை எனக்கு தரவேண்டும் என்று குறிப்பிட்டு எனக்கு **வக்கீல் நோட்டீஸ்** அனுப்பினார். ஆயிரக்கணக்கில் ஆவிக்குரிய புத்தகங்கள் எழுதியவரும் **அன்றன்றுள்ள அப்பம்** என்ற தினசரி தியான புத்தகத்தின் உரிமையாளருமான **சகோ.சாம்ஜெபதுரை** அவர்கள்தான் நான் மேலே குறிப்பிட்ட அந்த நபர். நான் **ஏமன்** என்ற அரபு தேசத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது எனக்கு **வக்கீல் நோட்டீஸ்** அனுப்பினார்.

**அந்நியபாஷை** என்ற பெயரில் உளரும் பாஷையையும் **அக்கினி அபிஷேகம்** போன்ற பெயரில் பல அபிஷேகங்களை தான் பெற்றதாக கூறிய ஊழியருமான சகோ. **சாம்ஜெபதுரை** அவர்கள் தான் என் ஊழிய வாழ்க்கையில் முதன்முதல் **வக்கீல் நோட்டீஸ்** எனக்கு அனுப்பிய பிரபல ஊழியராகும். இவரும் சகோ.**மோகன் சி.லாசரஸ்** ஆகிய இன்னும் சிலரும் **டாக்டர் பட்டம்** பெற்றவர்களாகும். இவர்கள் எப்படி **டாக்டர் பட்டம்** விலைக்கு பெற்றார்கள் என்பதை குறிப்பிட்டு என் பழைய ஜாமக்காரனில் **புகைப்படத்தோடு** எழுதினேன். இவர்கள் எல்லாரும் தீர்க்கதரிசிகளாகவும் தமிழ்நாட்டில் வலம் வருகிறார்கள்.

இப்போது விஷயத்துக்கு வருகிறேன். சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் ஏஞ்சல் TVயில் நடந்த மூவர் **சம்பாஷணை** என்ற நிகழ்ச்சியில் கூறியதாவது: **கர்த்தர் என்னோடு பேசினார். நீ ஏஞ்சல் டிவி சாது செல்வராஜ்** TV **நிகழ்ச்சியில் இணைந்து ஊழியம் செய் என்றார். இப்படி இயேசுவே நேருக்குநேர்** என்னிடம் பேசினார். மேலும் மோகன் சி.லாசரஸ் கூறியதாவது: **என்னை ஏஞ்சல்** TV **சாது செல்வராஜ்** அவர்களோடு ஐக்கியம் வைக்கவேண்டாம், அவருடைய **நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவேண்டாம்** என்று பலர் என்னை எச்சரித்தார்கள் என்பதையும் கூறினார். **சாதுசெல்வராஜ், வின்செண்ட் செல்வகுமார்** ஆகியோர் முன்னிலையில் வைத்து உலகம் முழுவதும் லட்சக்கணக்கானவர்கள் **ஏஞ்சல் டிவியை** பார்க்கவே இதை பகிரங்கமாக கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது, இப்படி பல எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் நானும் துணிந்து இந்த சம்பாஷணையில் கலந்துக்கொள்ள இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறேன் என்றார். மேலும் இயேசுகிறிஸ்து என்னிடம் நேரில் கூறியாதவது, இனி **கிறிஸ்தவர்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களை** நான் **வின்செண்ட் செல்வகுமாருக்கு** வெளிப்படுத்தியதை நீயும் மக்களுக்கு அவர்களோடு இணைந்து **சொல்** என்றார். **இயேசுவே நேரில்** வந்து அப்படி கூறியபின் மக்கள் நன்மைக்காக நான் **இவர்களோடு இணைந்து** சம்பாஷிக்காமல்போனால் எப்படி? **மனிதனைவிட** நான் தேவனுக்கு பயப்படுகிறவன். ஆகவே தொடர்ந்து இவர்களோடு ஏஞ்சல் டிவியில் இணைந்து இந்த தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கங்களை பகிர்ந்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

## இப்போது சம்பவித்தது என்ன?

ஒரே சமயத்தில் சகோ.**மோகன் சி.லாசரஸ்ஸிம்**, சகோ.**வின்செண்ட் செல்வகுமார் ஆகிய இருவரும்**, சகோ.**சாது செல்வராஜை** விட்டுப்பிரிந்தனர். **சம்பாஷணை எபிசோடுகள்** நிறுத்தப்பட்டது. அவரவர் தனித்தனியே மற்றவர் பணம் கொடுத்து நிகழ்ச்சிகளை நடத்துவதுபோல் இவர்களும் அதே ஏஞ்சல் டிவியில் பிரசங்கிக்க தொடங்கிவிட்டனர். அப்படியானால் ஆரம்பித்திலேயே **சகோ.சாதுசெல்வராஜ்**(Angel TV) **தீர்க்கதரிசனங்கள் யாவும் பொய் என்று**

மோகன் C.லாசரஸ்சின் அருள்நாதர் இயேசுக்கு (வேறொரு இயேசு) தெரியாதா? சகோ.வின்சென்ட் செல்வகுமார் மூலமாக கூறப்பட்டதாக கூறும் தீர்க்கதரிசனங்களும் கர்த்தர் **வின்சென்ட் செல்வகுமார்** அவர்களுக்கு வெளிப்படுத்தியதாக கூறியதும் **பொய்** என்று மோகன் சி.லாசரஸ்ஸின் **வேறொரு இயேசுவுக்கு** தெரியாதா?.

இவர்கள் **தீர்க்கதரிசனங்கள் பொய்** என்பதும் அது அவர்களின் கற்பனை என்பதும் இவர்களோடு இணைந்து **தீர்க்கதரிசனம்** கூறு என்று சகோ.மோகன் C. லாசரஸ்ஸிடம் கூறியவர் யார்? இப்போது அவர்களை **பிரிய சொன்னது** யார்? **அப்படியானால் இவர்களின் இயேசு யார்?** இவர்கள் **மூவரும்** கூறியதும் டிவியில் கூறிய **தீர்க்கதரிசனமும்** நூற்றுக்குநூறு **பொய்தானே!** கிருஸ்தவ TV சேனல்களை பார்க்கும் கிறிஸ்தவர்கள் எல்லாரும் **மாங்காய் மடையர்கள்** என்று இவர்கள் நினைத்துவிட்டனர். இவர்கள் தங்கள் ஊழியத்தில் **ஜெபத்தில் பெயர்களை** அழைப்பதும், மணிக்கணக்காய் **வறண்ட முள் மரங்கள்** நிறைந்த காட்டில் **அந்நியபாஷையில்** கர்த்தருடன் ஜெபித்தேன். **பெரும் ஆறுதலை** பெற்றேன் என்று இவர்கள் TVயில் இப்படி **பொய் உபதேசம்** கூறுவதால் வசனத்தின் அடிப்படையில் வாழும் **உண்மை கிறிஸ்தவர்கள்** எத்தனைப்பேர் இடறிப்போக இவர்கள் காரணமாக இருந்தார்கள். மக்கள் எவ்வளவாய் இவர்களை நம்பினார்களே!.

■ **கர்த்தர் கூறுகிறார்** என்று இந்த **தீர்க்கதரிசிகள்** என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் **தீர்க்கதரிசனஞ்** சொல்லுகிறார்கள்.

**நான் இவர்களை அனுப்பினதுமில்லை. இவர்களுக்கு கற்பித்ததுமில்லை, அவர்களோடே நான் பேசினதுமில்லை.**

இவர்கள் **கள்ளத்தீர்க்கதரிசனத்தையும்,**

இல்லாத **சுவிசேஷத்தையும்**, தங்கள் **இருதயத்தின் கபடத்தையுமே** உங்களுக்கு **தீர்க்கதரிசனமாய்ச்** சொல்லுகிறார்கள். எரே 14:14, உபா 18:22,எசே 13:2,3,6.

■ ஏஞ்சல் டிவி நிகழ்ச்சியில் பெண்களின் வயிற்றில் உண்டாகும் ஒவ்வொரு **கர்ப்பத்தையும் கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியாய்** மாற்றுவார் என்றும் **கர்ப்பஸ்திரீகளுக்காக விசேஷமாக ஜெபம்** செய்யவேண்டும் என்று கர்த்தர் தன்னிடம் கூறியதாக சாதுசெல்வராஜ் அவர்கள் அறிவித்து TV நிகழ்ச்சி கர்ப்பமுற்ற அந்த பெண்களை நேரில் வரவழைத்து அவர்களை **அந்நியபாஷையில்** ஒரு பெண் பொய்யான பாஷை பேசி ஜெபிக்கவைக்கிறார்.

■ இவர்கள் **அபத்தமானதை** தரிசனத்தை தரிசித்து பொய்க்குறியைச் சொல்லுகிறார்கள். எசே 13:7 என்று வேதம் நம்மை எச்சரிப்பது சரிதானே!.

மேலும் இவர்கள் மிகவும் ஞானமாய் **தமிழ் மக்களை** கவர இவர்கள் **மிஷனரிகளை** தாங்குகிறார்கள்,**ஆலயம்** காட்டுகிறார்கள்,**சூப்பர் ஸ்பஷாலிட்டி ஆஸ்பத்திரிகளை** கட்டுகிறார்கள். இப்படிப்பட்ட சமூகதொண்டுகளை செய்வதாக விளம்பரப்படுத்துவதால் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தங்கள் காணிக்கைகளை இவர்களுக்கு கொட்டோகொட்டென்று **பணமாக, டாலர்களாக** குவிப்பதால் இப்போது இந்திய அரசாங்கத்தின் **அமலாக்க துறையினரின்** பார்வையும், **வருமானவரி** துறையினரின் பார்வையும் இவர்கள் மேல் விழுந்தது.

கணக்கில் வராத **கருப்பு பணங்களை** இவர்கள் நடத்தும் கன்வென்ஷன் கூட்டங்களில் ஜனங்கள் இடும் காணிக்கைகளோடு கலந்து **கருப்பை-வெள்ளையாக்கின** விவரங்களை அதிகாரிகள் சிலர் சேகரித்துள்ளார்கள் என்று செய்திகள் வருகிறது.

**ஏஞ்சல்** TV சகோ.**சாது செல்வராஜ்** அவர்களுக்கு **ஐரோப்பிய** நாடுகளிலிருந்தும், **ஆஸ்ட்ரேலியாவிலிருந்தும்,சிங்கப்பூர்,மலேசியாவிலிருந்தும்** அனுப்பும் காணிக்கைகள் **வங்கி**

வழியாக வராமல் **வேறுவிதமான** முறையில் பணமாக கை மாறுகிறதையும் கண்டுபிடித்து விட்டார்கள். இந்த விவரங்களை அறிந்த சகோ.**மோகன் சி.லாசரஸ், வின்செண்ட் செல்வகுமார்** ஆகிய இந்த இருவரும் தங்களை அரசாங்கம் பிடித்துவிடும் என்று பயந்து மிகவும் ஞானமாய் **ஏஞ்சல்** TV **சம்பாஷனைகளை நிறுத்தி** மற்றும் சாதுசெல்வராஜ்உடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்புகளையும் அறுத்துக்கொண்டார்கள். **இந்திய அரசாங்கத்தின்** பார்வையிலிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள இப்போது இவர்கள் இருவரும் தனித்தனியாக செயல்படுகின்றனர். **சகோ.மோகன் சி.லாசரஸ்சை** இவர்களுடன் **இணைய சொன்னது இயேசு** என்றால் இப்போ அவர்கள் **சம்பாஷனையை தொடர்பை நிறுத்த சொன்னதும் இயேசு** என்றால் கர்த்தர் என்னிடம் கூறினார் என்று மோகன் சி.லாசரஸ் கூறியதும் பொய்தானே!. **உண்மையான கிறிஸ்து** இப்படி மாற்றி மாற்றி பேசுவாரா? இப்படி பலரிடம் எழும்பின கேள்விகளால்தான் இந்த கட்டுரையை எழுத துணிந்தேன்.

## அதிர்ச்சி தரும் தகவல்கள்:

இனி நீங்கள் கீழே வாசிக்கபோகும் விவரங்கள் **யார் எழுதினார்களோ** எனக்குத் தெரியாது. எழுதப்பட்ட விவரங்கள் **உண்மையோ - பொய்யோ** என்றும் எனக்குத்தெரியாது.

**கடந்த 2015ம் வருடம் இது என் கைக்கு கிடைத்தது.** கீழ்காணும் தகவல்கள் **உண்மையா? பொய்யா?** என்பதை அறிவதற்கு நான் எடுத்த முயற்சிகளால்தான் இதை வெளியிட இத்தனை தாமதமானது.

நான் இக்கடித்தை இவர்கள் அலுவலகத்திலுள்ள மூன்று நபர்களிடம் காட்டி உண்மையை உறுதிப்படுத்த முயன்றேன். இதில் எழுதப்பட்ட விவரம் பலர் **மிகைப்படுத்தப்பட்டுள்ளது** என்றார்கள். வேறு சிலர் எழுதியவர் **காழ்ப்புணர்ச்சி** காரணமாக எழுதியிருக்கலாம் என்றும் கூறினார்கள். ஆனாலும் எழுதப்பட்ட பல விஷயங்கள் உண்மையாக இருக்கலாம் என்று பலரால் யூகிக்கப்படுகிறது என்றும் கூறினார்கள். எழுதப்பட்ட மொட்டை கடிதம் **யூகங்களானாலும்** அது நிச்சயம் ஊழியக்காரர்களை அவமானப்படுத்துவதாகத்தான் அமையும் என்றாலும், வாசர்களை இப்படிப்பட்ட செய்திகள் மூலமாக **எச்சரிப்பது** என் கடமையல்லவா!. காரணம், எழுதப்பட்ட பல விஷயங்கள் உண்மை என்று அறியத்தருகிறது.

இதில் குறிப்பிட்ட நபர்கள் ஒருவரைத்தவிர மற்ற யாரையும் **நான் நேரில் கண்டதில்லை.** ஒரே ஒருமுறை **சகோ.மோகன் சி.லாசரஸ்** அவர்களை அவரைப்பற்றிய விவரங்கள் சேகரிக்க,அவரை மட்டும் நேரில் சந்தித்தேன். **ஜெபத்தில் அவர் பெயர் அழைப்பதைக்குறித்து** சந்தேகங்களை தீர்க்க அவருடைய பாசறைக்கே நேரில் சென்று சுமார் ஒரு மணி நேரம் பேசினேன். இந்த விவரத்தையும் என் வாசகர்களுக்கு பல வருடத்துக்கு முன்பே ஜாமக்காரனில் நான் எழுதி அறிவித்திருக்கிறேன். மேலும் மோகன் சி.லாசரஸ்க்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனையும் கூறினேன். **ஜெபத்தில் பெயர் அழைக்கும் பொய்யை** நிறுத்தும்படியும் கேட்டுக்கொண்டேன்.

கொஞ்சநாள் அப்படிப்பட்ட ஊழியத்தை குறைத்திருந்தார் என்று கேள்விப்பட்டேன். ஆனால் மறுபடியும் தொடங்கிவிட்டார் என்றும் அறிந்தேன். **ஜெபத்தில் பெயர் அழைக்காமல் அவர் ஊழிய வியாபாரம்** நடைபெறாது என்பதை இவரின் குருவான **சகோ.தினகரனிடமிருந்து** அந்த வியாபார நுணுக்கத்தை கற்றுக்கொண்டார் என்று நினைக்கிறேன்.

**HIV, எயிட்ஸ்** வியாதி தன் ஜெபம் மூலம் சுகமானது என்று மோகன் சி.லாசரஸ் கூறியதை **பொய்** என்று நான் ஜாமக்காரனில் நிரூபித்தேன்.

■ அதிலிருந்து இவருடைய கூட்டத்தில் **HIV வியாதி சுகமானது, சர்க்கரை** வியாதி சுகமானது என்று கூறும் **பொய் சாட்சிகளை** இவர் இப்போது மேடை ஏற்றுவதில்லை.

■ **எனக்கும்** மேலே நான் குறிப்பிட்ட **மூவருக்கும்** ஊழியத்தில் எந்த தொடர்பும் இதுவரை இல்லை. அந்த **மூவரின் ஊழியத்தால்** என் ஊழியம் எந்த அளவும் **பாதிக்கப்படவும்** இல்லை. நான் ஜாமக்காரனில் ஏற்கனவே **இவர்களைப்பற்றிய** குறைகளை நான் சுட்டிக்காட்டி எழுதியதால் **இவர்கள் ஊழியமும்** சிறிதளவுகூட பாதிக்கப்படவில்லை.

■ நம் கிறிஸ்தவ சபைகளில் **வசனம் அறியாதவர்களின்** எண்ணிக்கை மிக அதிகம் **வேதத்தை வாசிக்காது** பெயருக்கு சில வசனங்களை வாசித்து ஒடுகிறவர்களின் எண்ணிக்கை யும் மிக அதிகம். இப்படிப்பட்டவர்கள்தான் **ஆறுதலை** மட்டும் தேடிப்போகிறவர்கள் ஆகும். மேலும் இவர்கள் வசனத்துக்கு கீழ்படியும் எண்ணம் இல்லாதவர்கள் ஆகும். இவர்களின் இப்படிப்பட்ட பலவீனத்தை புரிந்துக்கொண்டு இந்த ஊழியர்களின் பிரசங்கமும் **ஆறுதல் பிரசங்கமாகவே** இருக்கும். மக்களுக்கு அதுபோதுமே!. மேலும் முக்கியமாக இவர்கள் பிரசங்கத்தில் **உதாரணமாக கூறும் கதைகளை** மக்கள் அப்படியே நம்பிவிடுகிறார்கள். அதுவே இவர்களுக்கு பெரும் விளம்பரமாகிறது.

**இன்றய காலங்களில் குற்றங்களை** சுட்டிக்காட்டுவது, **குறைகளை** சுட்டிக்காட்டுவது அவரவர் மனைவிமார்களுக்கும், கணவன்மார்களுக்குமே பிடிக்காதே!. ஆகவே இவர்களின் **ஆறுதல்** பிரசங்க வியாபாரம் **தமிழர்கள் வாழும்** இடங்களில், **வெளிநாடுகளிலும்** கனஜோராக நடக்கிறது.

இந்த ஊழியர்கள்மேல் **எனக்கோ** அல்லது **அவர்களுக்கோ எந்த காழ்ப்புணர்ச்சியும், பொறாமையும்** கிடையாது. அவர்கள் **ஊழியம் வேறு - என் ஊழியம் வேறு.**

■ இதை வாசிப்பவர்கள் நான் எழுதுவதை **நம்ப வேண்டும்** என்பது **அவசியம் இல்லை.** நான் எழுதும் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் அவசியமில்லை. **அறிவிக்கவேண்டியது, எச்சரிக்க வேண்டியது** மட்டுமே என் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஊழியம் ஆகும். யாரையும் **ஜாமக்காரன்** பத்திரிக்கை மூலம **மனம்திரும்பவைக்க** நான் பத்திரிக்கை நடத்தவில்லை. **மனந்திரும்பின கிறிஸ்தவ விசுவாசிகள்** தங்களை ஜாக்கிறதைப்படுத்தி கொள்ளவே பத்திரிக்கை நடத்துகிறேன். ஆகவே இன்றைக்கு இதையும் எழுதுகிறேன்.

இவர்களைப்பற்றி **நான் எழுதியது** யாருக்காவது **பிடிக்கவில்லையானால்** தயவுசெய்து **ஜாமக்காரனை எனக்கே திருப்பி அனுப்பிவிடுங்கள்** அல்லது ஜாமக்காரன் எனக்கு **அனுப்ப வேண்டாம்** என்று எனக்கு எழுதிவிடுங்கள்.

## குறிப்பாக ஏஞ்சல் TV சாது செல்வராஜ் அவர்கள் ஊழியத்தை அதிகமாக குறிப்பிட்டு நான் குறை சொல்வதேன்?:

ஏஞ்சல் TVயை **சாதுசெல்வராஜ்** அவர்கள் தொடங்குவதற்கு முன்பே அவரின் **இமயமலை, திபெத்** ஊழியத்தின் **போலித்தனத்தை** நான் அறிவேன். நான் **ஆஸ்ட்ரேலியா** நாட்டுக்கு ஊழியம் செய்ய சென்ற ஆரம்பகாலங்களில் அங்குள்ள சிலர் தான் இதை எனக்கு அறிவித்தார்கள். தன் **திபெத்** ஊழியத்தைப்பற்றி **பொய்யான** பல தகவல்களை தன் பிரசங்கத்தில் இவர் கூறி **ஆஸ்ட்ரேலியாவில் உள்ள இலங்கை தமிழர்களிடம்** பணம் சேகரிக்க சென்றதையும் அவர் கூறிய தவறான தகவல்களை கேஸட் மூலம் எனக்கு போட்டு காண்பித்து, சாது செல்வராஜ்

என்பவர் அடிக்கடி எங்கள் நாட்டுக்கு வந்து பணம் சேகரித்து செல்கிறார். இவர் ஊழியத்தைப்பற்றி விசாரித்து உண்மை விவரங்களை எங்களுக்கு சொல்லுங்கள் என்று தமிழர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். அவர் மிகைப்படுத்தி கூறியதை **ஆஸ்ட்ரேலியா தமிழர்கள்** நம்பவில்லை என்பதை அறிந்தேன். **இந்தியா** வந்த உடனே என்னால் **அவரைப்பற்றி விசாரிக்க நேரமில்லை.** ஆனால் இவரைப்பற்றி கடிதம்மூலம் சிலரிடம் தொடர்புக்கொண்டு விசாரித்தேன். சிலர் கேரளாவிலிருந்து **திபெத்** சென்று அங்கு வேலை செய்கிறார்கள். அந்த ஆரம்ப காலங்களில் அங்குள்ள **ராணுவ அதிகாரிகளுக்கு** நான் கடிதம் எழுதி இவரைப்பற்றி விசாரித்து எனக்கு பதில் எழுதும்படி கேட்டுக்கொண்டேன். இவர்கள் மூலம் கிடைத்த விவரங்கள் கேட்டபோதும், இவருடைய உறவினர்கள் மூலம் கிடைத்த சில தகவல்களை சேகரித்தபோதும் தான் இவரின் போலியான **திபெத் ஊழியத்தின் விவரம்** தெரியவந்தது.

கர்த்தர் **சாது சுந்தர்சிங்** அவர்களின் ஊழியத்தின்பின் தொடர்ச்சியாக அவர் ஊழியத்தில் சாதுசெல்வராஜ் ஆகிய என்னை கர்த்தர் நியமித்து **காவி உடை** உடுக்க கர்த்தர் சொன்னார் என்று இவர் கூறியதை கேட்டபோது இவரின் ஊழிய தவறுகளை விளங்கிக்கொண்டேன்.

**ஒருவர் சாது** என்ற பெயரை ஏற்றுக்கொண்டால் **இந்துமத ஆகம விதிகளின்படி** ஒரு சாது ஒரு ஊரில் 5 நாட்களுக்குமேல் தங்கக்கூடாது. சஞ்ஜரித்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இப்போது **சாதுசெல்வராஜ்** அவர்கள் தமிழ்நாட்டில் **காவி உடையும்,** வெளிமாநிலத்திற்கு அல்லது வெளிநாடுகளுக்கு செல்லும்போது **T.Shirt,பேண்ட்டுடன்** சென்றுவரும் போட்டோக்களை பார்க்கும்போது அவருக்குள்ளே இரண்டுவித மனிதன் உண்டு என்று அறியத்தருகிறது.

## பொய் சாட்சிகள்:

இவருடைய **பொய் சாட்சிகளை** நம்ப மறுத்த இவரின் **விசிறிகளே** இவர் பேசிய இவருடைய **பொய் சாட்சிகளைப்பற்றிய விவரம்** எனக்கு அனுப்பினார்கள்.

**சாது சொன்ன கதை: சாது செல்வராஜ்** அவர்கள் வீதிவழியே சென்று கொண்டிருந்தபோது கத்தோலிக்க சபையை சார்ந்த ஒருவரின் வீட்டின் ஜன்னல் அருகே பிறவி முதல் நடக்கமுடியாத **முடவனாகிய** சிறுவன் ஒருவன் தன்கட்டிலில் படுத்தவாரே வீதியை நோக்கிக்கொண்டிருந்தான். உடனே **சாது செல்வராஜ்** அவர்கள் அங்கு நின்று அவனை **உற்று** சில நிமிடங்கள் அசையாமல் அவனையையே பார்த்துக்கொண்டிருந்தராம். உடனே அவன் சுகமாகி எழுந்து தன் தாயிடம் ஓடினானாம். அந்த தாய் தன்மகன் நடப்பதைக்கண்டு ஓடிவந்து மகனை கட்டிபிடித்து விசாரித்த போது **இயேசுவைப்போல** ஒருவர் **ஜன்னல்** வழியே நின்று தன்னை உற்றுப்பார்த்துக் கொண்டேயிருந்தார் என்றும், **சற்று நேரத்தில்** தனக்கு பெலம் வந்து கால்களை ஊன்றி தானாக நடக்க ஆரம்பித்தேன் என்றானாம். மேலும் அந்த இயேசு இப்போதுதான் வெளியில் நடந்து போய் கொண்டிருப்பார் என்றானாம். அந்த தாய் வெளியில் வந்து பார்த்தபோது அங்கு இயேசுயில்லை, யாரோ ஒரு **சாது** சாலையில் நடந்து சென்றுக் கொண்டிருப்பதை கண்டு ஓடி, ஐயா, நீங்கள்தான் என் மகனை உற்று பார்த்தீர்களா? என் **மகன்**தான் உங்களை அடையாளம் காட்டினான். நாங்களும் கிறிஸ்தவர்கள்தான். நீங்கள் **அருள்** பெற்ற **தெய்வ மனிதன்போல்** இருக்கிறது. ஒரு **கண் பார்வையிலேயே** பிறந்ததிலிருந்து **நடக்கமுடியாத** படுத்தபடுக்கையில் இருந்த என் **மகன் சுகம்பெற்றுதானே நடந்து** வந்து என்னிடம் இந்த விவரங்களை கூறினான் என்றாளாம். இப்படி **பல அற்புதங்கள் என் ஊழியத்தில் இயேசு செய்து** வருகிறார் என்று இவர் கூறியிருக்கிறார்.

அந்த விவரங்களையெல்லாம் சேகரித்து **சாது செல்வராஜ்** விலாசத்துக்கே (டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய) நானே அவருக்கு கடிதம் எழுதினேன். சகோதரனே!, நீங்கள் பத்திரிக்கையில் எழுதிய **அற்புத சாட்சியும்** அந்த குடும்பத்தினர் அறிவித்த சாட்சியும் சாதாரணமானதல்ல. ஆகவே அந்த அற்புதம் நடந்த வீட்டாரையும், சுகம் பெற்ற பையனையும் நான் **புகைப்படம்** எடுத்து என் பத்திரிக்கை மூலம் உலகக்கு அறிவிக்க ஆவலாக இருக்கிறேன். அந்த **குடும்பங்களின் விலாசத்தை** எனக்கு எழுதிய அனுப்ப இயலுமா? என்று எழுதினேன். அப்போதெல்லாம் இவர் உடனுக்குடன் பதில் கடிதம் எழுதுவார். உடனே அவர் தன் **சொந்த கையெழுத்தோடு சென்னையிலிருந்து** எனக்கு கடிதம் எழுதினார். அதில் எனக்கு அவர்கள் **விலாசம் ஞாபகம் இல்லை. சென்னையில் எந்த வீதி** என்பதும் எனக்கு மறந்துவிட்டது என்று பதில் எழுதினார்.

அவரின் **சாட்சி பொய்யானது** என்பதை உறுதி செய்து அந்த மாத பத்திரிக்கையிலேயே அவரைப்பற்றியும் இன்னும் இவர் கூறிய பலரின் **பொய் சாட்சிகளைப்பற்றியும்** அவர்களின் முழு விலாசத்தோடு என் வாசகர்களுக்கு எழுதி அறிவித்தேன்.

## ஆரம்பகால வாழ்க்கை:

இவரின் ஆரம்பகால தனிப்பட்ட வாழ்க்கைகளைக்குறித்து விவரிக்க எனக்கு பிரியம் இல்லை. **இரட்சிக்கப்படும்முன்** பல தோல்விகள், ஏமாற்றங்கள் இவரை இயேசுவிடம் நெருங்கவைத்தன. இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்னும் தோல்விகளை சந்தித்தார். சிறுசிறு ஊழியங்களை செய்துவந்த இவருக்கு வடஇந்தியாவில் ஒரு நண்பர் கிடைத்தார். அவர் மூலம் தான் வாசித்து அதனால் கவரப்பட்ட **சாதுசுந்தர்சிங்** வாழ்ந்த இடத்தை பார்க்க ஆசைப்பட்டார். **காவி உடைக்கு** வடஇந்தியர்கள் **தனி மரியாதை** கொடுப்பார்கள். ஆகவே **காவி உடைக்குள்** புகுந்து கொண்டு ஊழியம் செய்தார். ஓரளவு பலன் கிடைத்தது. ஆனால் அந்த ஊழியத்துக்கான உதவி கிடைக்கவில்லை. மேலும் **திபெத்** பகுதியில் **பிராண வாயு** மிகக்குறைவு. அதற்கான பாதுகாப்பு கருவிகள் அக்காலத்தில் இல்லை. மேலும் **திபெத்** ஊழிய பலன் ஏதும் கிடைக்காததால் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருவதும் போதுவமாக இருந்தார். **இராமநாதபுரத்தில்** சகோ.வின்செண்ட் செல்வகுமார் அவர்களின் நட்பு கிடைத்தது.

அந்த காலத்தில் டிவியில் **கிறிஸ்தவ சேனல்கள்** தமிழில் கிடையாது. எப்படியோ கையில் சேகரித்த வெளிநாட்டு பணம் கொண்டு TV சேனல் தொடங்க சிலரால் ஊக்குவிக்கப்பட்டார். **சகோ.தினகரன்** ஊழியத்தில் கவரப்பட்ட அவர் சகோ.**தினகரனின்** கூட்டங்கள் எங்கு நடந்தாலும் அந்த கூட்டங்களில் பங்குபெறுவார். ஆகவே அவர் ஊழிய பாணியை இவரும் பின்பற்றினார்.

இடையே சகோ.**ஜேம்ஸ் வில்சன்**(இப்போது **சால்வேஷன்** TV சேனல் நடத்திக் கொண்டிருப்பவர்) அவர்களும், **சாது செல்வராஜ்** அவர்களும் இணைந்தார்கள். சகோ.ஜேம்ஸ் வில்சன் அவர்கள் இணைந்த பிறகுதான் ஏஞ்சல் TV மெல்லமெல்ல வளர ஆரம்பித்தது. வளர்ந்தது பணம் பெருகினது. உடனே இருவரும் பிரிந்தனர்.



ஒருநாள் **சகோ.ஜேம்ஸ் வில்சன்** அவர்களை ஏஞ்சல் டிவியிலிருந்து **சாதுசெல்வராஜ்** அவர்கள் திடீரென்று வேலையை விட்டு நீக்கிவிட்டார். எந்த காரணமும் கூறாமல், முன் அறிவிப்பு எதுவுமின்றி ஏஞ்சல் டிவியிலிருந்து வெளியேற்றப்பட்டார். சகோ.ஜேம்ஸ் வில்சன் அவர்களை ஏஞ்சல் TVயிலிருந்து நீக்கியதற்கு **சாதுசெல்வராஜ்** அவர்கள் கூறும் காரணம் வேறு. ஆனால் அதற்குள் பிரவேசிக்க நான் விரும்பவில்லை. எதிர்ப்பாராத அந்த குறிப்பிட்ட நாளின்

அதிர்ச்சியும், பாதிப்பும் இன்னும் சால்வேஷன் TV சகோ.**ஜேம்ஸ் வில்சன்** அவர்கள் மனதிலிருந்து நீங்கவேயில்லை. அனாதையாய் கைவிடப்பட்ட நிலையில் ஏஞ்சல் டிவியை விட்டு வெளிவந்த ஜேம்ஸ்வில்சன் அவர்களை ஒரு சகோதரன் குடும்பத்தினர் அவரை உற்சாகப்படுத்தி **சால்வேஷன்** TVயை ஆரம்பிக்க ஊக்கப்படுத்தினர். அந்த சம்பவங்களையும் விலக்கப்பட்ட அன்று **சாது செல்வராஜ்** அவர்கள் **நடந்துக்கொண்டவிதத்தைக்குறித்தும் சகோ.ஜேம்ஸ்வில்சன்** அவர்களை விசாரித்தால் போதும் ஆரம்பத்திலிருந்து **இன்றுவரை நடக்கும் ஊழல்களை** மிகத்தெளிவாக கூறுவார். நான் ஜேம்ஸ் வில்சன் அவர்களையும் இதுவரை நேரில் கண்டதில்லை. அவருடன் பேசியதும் இல்லை.

எப்படியோ **ஏஞ்சல்** TV **ஆலமரமாக** வளர்ந்தது. சாதுவின் உபதேசங்கள் மாறியது. பணத்துக்காக எந்த பொய்யும் கூற சாதுசெல்வராஜ் தயங்குவதில்லை. பொய்யின் அஸ்திபாரத்தில் வளர்ந்த டிவி சேனல்தான் ஏஞ்சல் TV ஆகும். டிவி ஊழியத்திலும் தன் குருவான **சகோ.தினகரனைப்**பின்பற்றி **பரலோகம்**பற்றிய சாட்சிகளை பொய்யாய் பொழிந்தார். **பரலோகம்**பற்றிய கூறும் பொய்சாட்சியில் இவர் **சகோ.தினகரனையே** அள்ளி சாப்பிட்டுவிட்டார் என்றே கூறலாம்.

அடிக்கடி **பரலோகம்** போய் வந்தவர். இப்போது தினசரி காலையும்,மாலையும் பரலோகம் போய் வருவதாக கூறினார். பரலோகத்தில் **பிதாவையும்,குமாரனையும்** பரிசுத்த ஆவியானரையும் சர்வ சாதரணமாக சந்திப்பதாக புளுகினார். பிதா தன்னிடம் அமெரிக்கா **ஹாலிவுட் சினிமா** வீடியோவை கொடுத்து நீ இதை பார். அந்த சினிமாவின் படத்தின் குவாலிட்டியை பார், படத்தின் தரத்தை பார். உன் ஏஞ்சல் டிவியும் அதே தரத்தில் குவாலிட்டி உயர்த்தப்படவேண்டும் என்றாராம். இவர் கூறும் **பரலோக பிதாவும்** அந்த **ஆங்கில சினிமா** படத்தை பார்த்து ரசித்து அதன் தரத்தை **ஏஞ்சல்** TV**யிலும்** கொண்டுவர வேண்டும் என்று கூறினால் இவருடைய அருள்நாதரும், பிதாவும் அந்த சினிமா படத்தை எத்தனை முறை பார்த்து ரசித்திருக்கவேண்டும்.

**பரலோகத்தில்** மாதம் ஒரு கமிட்டி கூடுமாம். அதில் கலந்துகொள்ள **சாதுவும்** போவாராம். **பிதாவின்** அருகேயுள்ள **நாற்காலியில்**தான் சாதுவும் அமர வைக்கப்பட்டராம். இப்படி தெலுங்கு சினிமா படம்போல இவர் கூறும் பரலோக காட்சிகளின் கதைகள் நீண்டுபோகிறது.

இப்படிப்பட்ட கதைகளை ஏஞ்சல் TV ரசிகர்கள் **நம்பினார்கள்,ரசித்தார்கள்.** திடீர் என்று ஒரு பெரும் பிரச்சனையில் சாதுசெல்வராஜ் அகப்பட்டார்.

## முதல்முறை ஏஞ்சல் டிவி நிறுத்தப்பட்டது:

**ஏஞ்சல் TVயை நிறுத்திவிட்டதாக TVயிலேயே அறிவிப்பு** கொடுத்து கடைசி சினிமா காட்சியாக செகன்ட்ஷோ போல் ஒரு நாளை குறிப்பிட்டார். **ஏஞ்சல் TVயில்** வேலை பார்ப்பவர்கள், **டெக்னிஷியன்ஸ்** முதல் **கார் டிரைவர் வரை** ஒவ்வொருவராக ஏஞ்சல் டிவியின் **பிரிவு உபச்சார கடைசி காட்சியில்** தோன்றி நன்றி கூறி விடைபெறுவதாக ஒவ்வொருவராக வந்து கூறினார்கள். சிலர் **தெங்கிய முகம், சிலர் கலங்கின கண்கள்**, சிலர் **அழுதுகொண்டு** விடை பெறுவதாக அறிவித்தனர். ஏஞ்சல் டிவியை நிறுத்துவதாக அறிவித்ததும் டிவி படபிடிப்பினார் அலுவலகத்தில் உள்ளவர் காட்சி அமைப்பாளர்கள் யாவரும் **அழுதுக்கொண்டே** விடைபெற்றது ஒரு திட்டத்தோடு கூடிய **கண்துடைப்பு** நாடகம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் அந்த டிவி நிகழ்ச்சிகளை பார்க்கும் மக்கள் அந்த உண்மையை அறிய நியாயமில்லை.

மறுபடியும் புதிய வேகத்தில் **ஏஞ்சல் டிவி** நிகழ்ச்சியை தொடங்கினார்கள். வெகு சீக்கிரத்திலேயே வேறு சில பாஷைகளிலும் நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். வெளிநாட்டு கிறிஸ்தவ டிவி சேனல்களுடன் (ஒப்பந்தம்)டையப் வைத்துக்கொண்டார்கள். வெளிநாட்டு பண உதவி ஏராளமாக கிடைத்தது.

இப்போது சாதுசெல்வராஜ் அவர்களின் புத்தி வேறுவிதமாக மாறிவிட்டது. திட்டமிட்டு மக்களை பெரும் மடையர்களாக்கினார்கள்.

இவர்களின் அருள்நாதர் அதாவது **வேறு இயேசு** சாதுசெல்வராஜ் அவர்களை மறுபடியும் பரலோகத்துக்கு அழைத்துச்சென்று நீ **இஸ்ரவேல்** தேசத்தில் **எருசலேமில்** நிலம்வாங்கி அங்கு உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் **ஏஞ்சல் டிவியை** காணத்தக்கதாக மிகப்பெரிய சேட்டலைட் ஆண்டனா(கருவி) பொருத்து அதோடு அதற்கான கட்டிட வேலையை சீக்கிரம் தொடங்கு. **அந்திக்கிறிஸ்துவுக்கு** கடைசியாக

கொடுக்கப்படும் 7 வருடத்தில் 3.1/2 வருடங்கள் உபத்திரகாலமும், அடுத்த **3.**1/2 **வருடங்கள் மகா உபத்திரவமுமாக** இருக்கும். அந்த முதல் 3.1/2 வருடங்களில் ஒரு சிலராவது இரட்சிக்கப்பட அவர்களுக்கு கடைசி சந்தர்ப்பம் கொடுக்கப்போகிறேன்.

பழைய ஏற்பாட்டில் சரீரத்தோடு எடுக்கப்பட்ட **ஏனோக்கையும், எலியாவையும்** மறுபடியும் இவர்களிடம் அனுப்பபோகிறேன். இவர்கள் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையையும் - இரண்டாம் வருகையைப்பற்றியும் கூறுவார்கள். மேலும் **இரண்டாம் வருகை** முடிந்துவிட்டது என்றும் நீங்கள் எல்லாம் கைவிடப்பட்டவர்கள் உங்களுக்கு கடைசி சந்தர்ப்பமாக நாங்கள் கூறும் **மனந்திரும்புதல், பாவமன்னிப்பையும்** பெற்று இயேசுகிறிஸ்துவோடு பரலோக பாக்கியத்தில் இணைந்துக்கொள்ளலாம் என்பார்கள். அந்த செய்தியை கேட்ட சிலர் மனந்திரும்புவார்கள். அந்திகிறிஸ்வுக்கு கோபம் அதிகமாகும். உடனே **ஏனோக்கையும் - எலியாவையும்** வீதியில் வெட்டிபோட்டு **சடலங்கள்** வீதியில் கிடக்க அதை **உலமனைத்திலும்** உள்ள மக்கள் அனைவரும் **தங்கள் கண்களால் பார்ப்பார்கள் என்ற வேத வசனத்தின்படி அந்த சம்பவம் நடைபெறத்தான் ஏஞ்சல் டிவி** நிலையத்தை எருசலேமில் கட்ட சொன்னேன் என்றாராம். நீங்கள் சாது செல்வராஜ் கூட்டணிகளும் கேமரா தொழிலாளர்களும், அலுவலக கூட்டமும் அந்த இரண்டு பேரின் **சடலங்களை** டெலிகாஸ்ட் செய்ய வேண்டும் என்றாராம்.

அப்போதுகூட **சாது செல்வராஜ்க்கும்,** அவரோடு இணைந்தவர்களுக்கும் அதற்கு பணஉதவி செய்தவர்களுக்கும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கைவிடப்பட்டவர்கள் ஆவார்கள். ஏஞ்சல் டிவியை எருசலேமில் **அந்திகிறிஸ்துவின் காலத்தில்** கட்டப்பட்டு, **டெலிகாஸ்ட்** நிலையம் இயக்கப்பட்டால் நாம் யாவரும் இயேசுவின் **இரண்டாம் வருகையில் கைவிடப்பட்டவர்களாவார்கள்.** என்று இவர்களுக்கு சிந்திக்க தோன்றவில்லையே!.

எருசலேமில் நிலம் வாங்கும் திட்டம் உறுதியாகிவிட்டது. இவர்களுக்கு முன்பே **இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்தின் மூலம் எருசலேமில் பணியப்பட்டதுதான் **ஜெப கோபுரம்** ஆகும். அது **ஜெப கோபுரம் அல்ல.** அது **ஒரு ஓட்டல், டூரிஸ்ட்கள் தங்கும் விடுதி, பெரும் கம்பெனிகளுக்கான அலுவலக** கட்டிடம் என்று இயேசு அழைக்கிறார் பங்களா பலருக்கு தெரியாது. இவர்களைப்பின்பற்றி **ஏஞ்சல்** டிவிக்காரர்களும் **எருசலேமில்** நிலம் வாங்கினார்கள். கட்டிடம் பணியும் ஏற்பாடு நடைபெறுவதாக கேள்விப்பட்டோம். எருசலேமில் ஒரு **அடி நிலம்** வாங்க மில்லியன் அல்ல. பல **பில்லியன் டாலர்கள்**(Billion Dollers) செலவு ஆகும். இப்போது இவர்களும் அத்தனை பில்லியன் டாலர்களை கொடுத்து நிலம் விலைக்கு வாங்கிவிட்டார்கள் என்று கேள்விபட்டோம்.

எத்தனை **பில்லியன்** பணம் செலவாகியிருக்கும்? இந்திய பணத்தில் **எத்தனை கோடிகள்** செலவாகியிருக்கும். இதன் அறிவிப்பை ஏஞ்சல் டிவியில் கேட்டிருப்பீர்கள். இவர்களின் **ஜெப கடித செய்திதாள்கள்** என்ற பெயரில் தங்கள் பங்காளர்களுக்கு **விசேஷ கடிதம்** எழுதி கட்டிட அறிவிப்புகளை பண உதவி செய்யும் பங்காளர்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

**ஜெப கோபுரத்துக்கு** காணிக்கை அனுப்பின அதே பெயர் **கிறிஸ்தவ பெரும் பணக்கார** வியாபாரிகளின் கூட்டத்தில் ஒரு பிரிவினர்தான் **ஏஞ்சல் டிவியையும், சகோ.மோகன் சி.லாசரஸ்** ஊழியங்களையும் தாங்குகிறவர்களாகும்.

## இயேசுவின் இரண்டாம் வருகையில் கைவிடப்போகும் நபர்கள்:

**இயேசுவின் இரண்டாம் வருகையில் கைவிடப்போகும் நபர்கள்** தான் இந்த ஏஞ்சல் TV **ஸ்தாபனத்தினரும்,** அதில் **பணியாற்றுபவர்களும் அதன் இவர்களுக்கு காணிக்கை அனுப்பும் பங்காளர்களுமாகும்** என்பது இதன்மூலம் உறுதியாக்கப்பட்டதல்லவா!.

இப்போது அடுத்த காணிக்கை கொள்கைக்காக ஏஞ்சல் TV அலுவலக கட்டிடம், ஸ்டுடியோ,ரிக்கார்டிங் கருவிகள் வாங்க **அருள்நாதர்** கட்டளையிட்டதாக அறிவிப்புகள் வந்து கொண்டிருப்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்போது இதற்கான பணம் இவர்களிடம் நிறைய ஆரம்பித்துவிட்டது. **GST, ஆதார்** இவைகளில் காணிக்கை அனுப்பியவர்களின் பணம் அகப்படாமல் இருக்க அந்த பெரும்தொகைகளை எங்கே பதுக்குவது என்று தெரியாமல் ஒவ்வொரு இடமாக **பணத்தை** மாற்றி மாற்றி வெவ்வேறு மாநிலங்களில் உள்ள சிலரை பினாமிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இதை ஒரு ஊழியம் என்று இந்த முட்டாள் பினாமிகளும் நம்பி பணத்தை பதுக்க உதவி செய்துகொண்டிருப்பதாக பல வருடங்களாக செய்திகள் காற்றின் வழியே வந்துக்கொண்டிருக்கிறது. அதை உறுதிப்படுத்தும் வகையில்தான் கீழே நீங்கள் தொடர்ந்து வாசிக்கபோகும் **மொட்டை கடித செய்திகளகும்.**

ஆரம்பித்திலேயே நான் குறிப்பிட்டுள்ளேன். இது சம்பந்தமான எந்த விஷயமும் எனக்கு தெரியாது. நான் **சேலத்தில்** இருப்பதோ வாரத்தில் **இரண்டு நாட்கள் மட்டுமே**!. எல்லா நாட்களிலும் இந்தியாவின் **பல்வேறு மாநிலத்தில் ஊழியம் செய்ய** அலைந்துக்கொண்டிருப்பேன். வாசகர்கள் கதை வாசிப்பதைப்போல் இவைகளை வாசிக்காமல் ஆவிக்குரிய பாரத்துடன் வாசித்து ஜெபியுங்கள். கிறிஸ்துவின் பெயரால் இத்தனை **பெரிய ஊழல்** பல்வேறு **ஸ்டார் ஊழியர்களால்** நடந்துக்கொண்டிருக்க **அதில் ஒருவராக** ஏஞ்சல் டிவியின் ஊழிய ஊழல்கள் எல்லை மீறி போய்விட்டன.

கர்த்தர் நமக்கு அநேக வருடங்களுக்கு பிறகு TVயில் **கிறிஸ்தவ சேனல்** மூலமாக **கிறிஸ்த தமிழ் நிகழ்ச்சிகள்,பிரசங்கங்கள்,பாடல்கள்** கேட்க உதவியிருக்கிறார். ஆனால் **ஆசீர்வாதம்** TV, **ஏஞ்சல்** TV போன்ற **பிழையான உபதேசம்** கொண்ட நபர்களிடம் அதை கொடுத்துவிட்டாரே!. ஜெபியுங்கள்.

## மொட்டை கடிதம்:

**மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம்.**

நான் **ஏஞ்சல் டிவி** அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தேன். அது **கர்த்தருக்கு விரோதமான ஊழியம்** என்பதை இப்போதுதான் நான் அறிந்து அதிலிருந்து விலகிவிட்டேன்.

அங்கு **பெண்கள் வேலை செய்வது ஆபத்தானது** என்பதால் இப்போது அதிலிருந்து விலகி வேறொரு வேலைக்காக முயற்சி பண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் தங்கள் பத்திரிகையை வாசித்தபோது நீங்கள் தேவனுடைய **பரிசுத்தவான்களை** தரக்குறைவாக எழுதி வருகிறீர்கள் என்று தவறாக நினைத்து உங்களை வெறுத்தேன். இங்கே **சாதுவும்** தங்களைப்பற்றி கூறி தங்கள் ஊழியங்கள் **சாத்தானின் ஆவியால்** இயக்கப்படுகிறது என்றும் சொல்லி வந்தார்கள். ஆகவேதான் உங்களை வெறுத்துவந்தேன். ஆனால் இங்கே ஏஞ்சல் டிவி ஸ்தாபனத்தில் நடக்கும் காரியங்களையும் இதில் இணைந்து ஊழியம் செய்துவரும் ஆட்களையும் கவனித்தபோதுதான் நீங்கள் சொல்வது **எத்தனை உண்மை** என்பதை உணர்ந்து கொண்டேன். **கிறிஸ்துவின்** ஊழியங்களைப்பற்றிய உங்கள் பாரத்தையும் உங்கள் உள்ளத்தின் ஆதங்கத்தையும் அறிந்துக்கொண்டு இப்படிப்பட்ட **தேவமனிதரை** நாம் தவறாக நினைத்து விட்டோமே என்று வருந்துகிறேன். மன்னியுங்கள் ஐயா!.

இந்த ஊழியத்தில் நடந்து வரும் சில **பயங்கரமான கிரியைகளை** நானே நேரில் பார்தேன். இந்த ஏஞ்சல் டிவி ஊழியம் நிச்சயமாகவே அநேகம் **ஆத்துமாக்களை வஞ்சிக்கும் ஒரு ஊழியம்தான்** என்பதில் சந்தேகமில்லை ஐயா.

இதன் ஸ்தாபகர் **சாது** ஒரு **தேவமனிதனே அல்ல** என்பதை சில நாட்களுக்குள்ளேயே கண்டுகொண்டேன். இச்சைகளினால் நிறைந்த ஒரு மனிதன். பெண்களை பணத்தைக் காட்டி மயக்கவும், **தரிசனம்** என்று பொய் சொல்லி ஏமாற்றவும் செய்யும் ஒரு **கள்ள ஊழியன் ஆகும்.** ஏஞ்சல் டிவி அலுவலகத்தில் எந்த நேரமும் சாது பக்கத்தில் பெண்கள்கூட இருக்கவேண்டும். **என் மகள்** மாதிரி என்று சொல்லி அவர்களை ஏமாற்ற செய்யும் ஒரு கள்ளஊழியன். என் மகள் மாதிரி என்று சொல்லிக் கொண்டே தகாத இடங்களில் எல்லாம் தொட்டு விளையாடும்போது அதற்கு **இணங்காத பெண்களை** விரைவிலேயே வேலையை விட்டு துாக்கிவிடுவார். சமீபத்தில் இங்கே பணி செய்யும் ???? என்ற பெண்ணை அலுவலகத்தில் தன் அறையில் வைத்து உதட்டில் முத்தமிட்டுவிட்டர். அந்தப் **பெண்** திருமணமாகி குழந்தைகள்கூட இருக்கிறது. அந்த பெண் இதை எதிர்த்தார். என் கணவரிடம் கூறப்போகிறேன் என்று கூறியவுடன் தன் அடியாட்களை வைத்து உன் பெயரையே நாசமாக்கிவிடுவேன் என்பதாக பயமுறுத்தி மறுநாளே வேலையிலிருந்து துரத்திவிட்டார். நான் சொல்வது உண்மையா என்பதை கீழ் உள்ள விலாசத்தில் நீங்கள் விசாரித்துக் கொள்ளலாம். கர்த்தருடைய நாமத்தில் நான் எழுதியதெல்லாம் முற்றிலும் உண்மை ஆகும். புதிதாக யாரும் திருமணமாகியிருந்தால் மறுநாளே அவர்களை அழைத்து அவர்கள் தங்கள் திருமண வாழ்க்கையை முதல்நாள் எப்படி ஆரம்பித்தார்கள் என்று பச்சை பச்சையாக ஆபாசமாக கேட்டு மகிழ்வார். இதில் **பெண்-ஆண்** என்றெல்லாம் பாகுபாடு பார்ப்பதில்லை. அலுவலகத்தில் யாருக்கு திருமணமாயிருந்தாலும் இதே கேள்வி தான் கேட்பார். அது அவருக்குள்ள பயங்கர ஆபாச ரசனையாகும்.

## ஹவாலா பண மோசடிகள்:

ஐயா, நான் எந்த தனிப்பட்ட கசப்புணர்வினாலும் சாது பற்றிய இந்த கடிதத்தை எழுதவில்லை. நான் பக்கத்திலிருந்து நேரில் பார்த்தை எழுதுகிறேன்.

ஏஞ்சல் டிவி அலுவலகத்துக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் கோடி கோடியாக பெரிய பெரிய பைகளில் தனிப்பட்ட நபர்கள் வழியாகக் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகிறது. பணம் இந்தியா வந்தவுடன் அந்த விவரத்தை ஒரு நபர் மர்மமான தொலைபேசி எண்ணிலிருந்து

ஏஞ்சல் டிவி அலுவலகத்திற்கு போன் செய்வார். அதை இவருடைய முக்கியமான காரியதரிசியான **சிரோன்மணி, அமீத்** போன்றவர்கள் மாத்திரமே அந்த குறிப்பிட்ட கைபேசியை இரகசியமாக எடுப்பார்கள். **போனில்** அந்த குறிப்பிட்ட நபர் **பணத்தை** பெற்றுக்கொள்ள வேண்டிய இடத்தைப் பற்றிச் சொல்லுவார். உடனே இவர்கள் தங்கள் வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்னையின் குறிப்பிட்ட முக்கிய இடங்களில் அந்த மனிதர்களை சந்தித்து **பணப்பைகளை** வாங்கிக் கொண்டு வந்துவிடுவார்கள்.

இந்தப் பணம் கோடிக்கணக்கிலிருக்கும், ஒருமுறை அலுவலகத்திலேயே அந்த பணத்தை மாலை நேரம்வரை கொண்டு வந்து வைத்திருந்து, **நடுராத்திரியில்** இடம்மாற்றினார்கள். இவர்கள் கொண்டுவரும் இந்தப் பணம் சர்தேச **குற்ற அமைப்புகளிருந்து** வருவதாக எங்கள் அலுவலகத்திலிருப்பவர்கள் இங்கே பேசிக்கொள்கிறார்கள். அது குறித்து முழுமையான விபரம் எனக்குத் தெரியாது.

ஆனால் அப்படி வரும் **பணம்** மறுநாளே **சாதுவின்** வீட்டில் கொண்டுபோய் வைக்கப்பட்டு அவருடைய **அந்தரங்க நண்பர்களான** பாஸ்டர்.**ராஜன், ஜான் அருள்தாஸ்** போன்றவர்கள் வசம் பிரித்துக் கொடுக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது என்று கூற கேட்டிருக்கிறேன்.

சில சமயங்களில் **சாது** அவர்களே தன்னுடைய காரில் தனிப்பட்ட முறையில் பணத்தை பெட்டிகளில் எடுத்துக்கொண்டு நேரடியாகக் **காரைக்குடி** சென்று அங்கு ஒரு குடும்பத்திடம் ஒப்படைத்து திரும்பியிருக்கிறார். இவ்விவரத்தையும் மறுநாளே அலுவலத்தில் உள்ள சிலர் ஒருவருக்கொருவர் இரகசியமாக பேசிக்கொள்வதை கேட்டிருக்கிறேன்.

இதில் ஏனோ **சாதுவின் நண்பர்** என்று சொல்லப்படும் **சகோ.வின்செண்ட் செல்வகுமாரை, சாதுசெல்வராஜ்** சேர்த்துக்கொள்வதில்லை. அவருக்கு எதுவும் தெரியப்படுத்திவிடக்கூடாது என்பதில் **சாது** மிகவும் குறியாயிருப்பார்.

**ஏஞ்சல் டிவியின்** பணியாளர்கள் யாரும் சகோ.வின்செண்ட் செல்வகுமாருடன் பேசக் கூடாது. இங்கிருக்கிற எதையும் அவரிடம் சொல்லக்கூடாது என்று கடுமையாக எங்களை எச்சரித்திருக்கிறார்.

இப்படி பதுக்கப்படும் பணம் பாஸ்டர்.**ராஜன் ஜான்** பெயரிலும் இவருடைய இரண்டு **மகள்கள்** பெயரிலும், **சிரோன்மணி, ஆனந்த்** என்பவர்கள் பெயரிலும், **பிஷப்.ஜான் அருள்தாஸ்** மற்றும் **அவருடைய பையன்கள்** இருவர் பெயரிலும் பத்திரப்படுத்தி வைக்கப்படுகிறது. அப்படி வைக்கப்படும் **பணம்** இரண்டு மாதங்களுக்குமேல் அவர்கள் வசம் விட்டு வைக்கப்படுவதில்லை. உடனடியாக **கலிம்பாங்கிலுள்ள** அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு விடும் இதில் நேபாளியர்களான **உத்தம்- மம்தா** ஆகியோர் பயன்படுத்தப்படுகிறார்கள்.

## சாதுவின் இரட்டை வேடம்:

சாது பணத்தின்மேல் அதிக ஆசையுள்ளவர். வெளியில் **காவி அணிந்திருந்தாலும் ஆடம்பர வாழ்க்கையில்** மிகவும் நாட்டமுடையவர். அவர் பயன்படுத்தும் எல்லாப் பொருட்களுமே மிகவும் விலையுயர்ந்தவைகளாகும்.

ஆனால் ஜனங்களுக்கிடையில் டிவியில் **தன்னை ஒரு பற்றற்ற துறவியைப்போலவும்** தன்னிடம் எதுவுமே இல்லாததை போலவும் காண்பித்துக் கொள்வார்.

உடுத்திக்கொள்ள **சட்டைக்கூட தன்னிடம் இல்லை** என்பதாக அடிக்கடி அவர் ஏஞ்சல் டிவியில் பேசுவதை இங்குள்ள எங்கள் அலுவலகத்தில் உள்ள வேலையாட்களே **பரியாசத்துடன்** பேசிக்கொள்வார்கள்.

இவருக்கு ஜாலரா அடிக்கும் ஆனந்த் என்பவன் ஏறத்தாழ சாதுவுக்கு அடியாள்போலவே செயல்படுபவன். அவன் மனைவி ????? சாதுவின் மடியில் உட்கார்ந்து கொள்கிற அளவுக்கு நெருக்கம். நாங்களே பல தடவை நேரடியாகப் பார்த்திருக்கிறோம்.

**சாதுவுக்கு** நெருக்கம் காண்பிப்பதால் ஸ்டாப்புகள்(அலுவலகத்தில் வேலையாட்கள்) நடுவில் அவளுடைய அடாவடிக்கு அளவேயில்லை. அவளை நாங்கள் யாராவது பகைத்துக்கொண்டால் எந்தப் பயங்கரமான பின் விளைவுகளை சந்திக்க வேண்டிவரும். அவள் கணவன் **ஆனந்த்** இங்குள்ள பெண்களிடம் நடந்துகொள்ளும் விதம் ஒவ்வொன்றும் அசிங்கம். அவனை யாரும் எதிர்த்துக் கேட்க முடியாது.

# ஆடம்பர வீடு:

**சாது** சமீபத்தில் தனக்கென்று வாங்கியிருக்கும் **ஆடம்பர பங்களாவின்** விலை **இரண்டரைக்கோடி(2.**1/2 **கோடி).** ஆனால் வெளியில் ஒன்றரை கோடி என்கிறார்கள். எனக்கு இதன் முழு உண்மை தெரியும்.

இந்த பங்களா **போரூரில்** இருக்கறிது. இரட்டை வீடு. இந்த வீட்டை **சிங்கள் பேமெண்டில்** வாங்கியிருக்கும் **சாது** அதில் **பர்னிஷிங்** பண்ண மாத்திரம் ஒரு **கோடிக்கு** அதிகமாக செலவழித்திருக்கிறார். இந்த வீட்டை தன்னுடைய **பெண் காரியதரிசி** என்று சொல்லப்படும் ???? என்பவரின் பெயரில் பதிவு செய்திருக்கிறார். ???? என்பவர் சாதுவின் அந்தரங்க காரியதரிசி என்று சொல்லப்படுகிறார்.

அவருடன் இந்த பெண்தான் வெளிநாட்டு ஊழியங்கள் எல்லாவற்றிற்கும் உடன் செல்பவர். அவருடன் ஒரே அறையிலும்(மரித்த ஊழியர். **ஜான் ரபீந்திரநாத்** அவர்களைப்போல) தங்குவதாகச் சொல்கிறார்கள்.

**சிங்கப்பூர்** தேசத்தை சேர்ந்த இந்தப் பெண்மணியின் **என்.ஆர்.**ஐ வசதியை பயன்படுத்தி அவர் பெயரில் இந்த வீட்டை முடித்ததோடு அலுவலகக்கணக்கில் தான் **போரூரில்** தனியாருக்குச் சொந்தமான வீட்டில் **வாடகைக்கு** குடியிருப்பதாக கணக்கில் காட்டி மாதந்தோறும் ????என்ற அந்த பெண்ணின் பெயருக்கு **60,000 ரூபாய்** வாடகை அனுப்பி வருகிறார்.

# ஆடம்பர கார்:

சமீபத்தில் தன் பெயருக்கு சொந்தமாக **பென்ஸ்- எஸ் வகையைச்** சேர்ந்த கார் ஒன்றை விலைக்கு வாங்கியிருக்கிறார். இதன் விலை சுமார் **1 கோடியே 67 லட்சம்** என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கார் வாங்கிய வகையில் பலர் கேள்வியெழுப்பி **பேஸ்புக்கிலும்**, **இன்டெர்நெட்டிலும்** தகவல்களைப் பரவச் செய்வதில் இந்தக் காரை கொஞ்ச நாட்கள் மறைத்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதன்படி **பாஸ்டர்.ராஜன் ஜான்** என்பவரின் வீட்டில் சில நாட்களும் அதன்பிறகு தனியாக ஒரு காரேஜ் வாடகைக்கு எடுத்தும் மறைத்தும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரும் தன் காரியதரிசியான ????? என்பவரின் பெயரில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவருடைய இந்த திரைமறைவு செயல்களுக்கெல்லாம் உடந்தையாக அவருடைய கார் டிரைவர் **கண்ணன்** என்பவரும், அலுவலகத்தின் காவலராகப் பணிபுரியும் **தயாநிதி** என்பவரும் இருக்கிறார்கள். தயாநிதி என்பவன் சென்னையில் பிரபல ரவுடிகளையெல்லாம் பழக்கத்தில் வைத்திருப்பவன் என்கின்றனர்.

இந்த ஊழியத்தின் வழியாக செய்யப்படும் பொல்லாத கிரியைகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் ஏராளமாக சொல்லலாம். ஐயா,

அவர்கள் இப்படிப்பட்ட **கள்ள ஊழியர்களின் முகத்திரையை** கிழிக்க நீங்கள்தான் உதவி செய்யவேண்டும் என்பதே எங்களைப் போன்றவர்களின் விருப்பம். ஐயா,

அவர்கள் இதன் செய்திகளை தங்கள் பத்திரிகையில் வெளியிடுவதானால் **என் பெயரை தயவு செய்து குறிப்பிடாமல்** வெளியிடுங்கள். என்னை அடையாளம் கண்டுக்கொண்டால் இந்தப் பொல்லாதவர்கள் என் உயிருக்கு ஆபத்து உண்டாக்குவார்கள்.

**நன்றி ஐயா.**

## குறிப்பு:

மேலே குறிப்பிட்ட ஊழியர்களைப்பற்றி **விதவிதமான குற்றச்சாட்டுகளும்**, இவர்களின் **தவறான நடத்தைகளையும்** குறித்து பல வருடங்களுக்கு முன்பே ஏராளமான செய்திகள் வந்துக் கொண்டிருக்கின்றன. இவர்கள் ஸ்தாபனத்தில் உள்ளவர்களின் மத்தியில் பல பிரச்சனைகளை கதைப்போல் எழுதி அறிவிக்கிறார்கள்.

ஒரு பெரிய ஸ்தாபனத்தில் ஒன்று,இரண்டுபேர் இப்படிப்பட்ட தவறுகள் செய்யலாம். வளர்ந்த எல்லா ஸ்தாபனங்களிலும் சர்வசாதாரணமாக இருக்கும்.

ஆனால் ஊழியர்களிடையே இப்படிப்பட்ட **சாட்சியில்லா காரியம்** காணப்படகூடாதே!. அன்றே இவைகளைப்பற்றி எழுதி **போதிய ஆதாரம்** கிடைக்கவில்லை. என்றாலும் கேள்விப்படும் இப்படிப்பட்ட செய்திகள் விசுவாசிகளையும், கர்த்தரையும் வேதனைப்படுத்தும். உலக புறமதத்தினர்களிடையே சாட்சி நஷ்டப்படும். கிறிஸ்தவ ஸ்தாபனங்களை கர்த்தர் வசனத்துக்கு நேராக நடத்துவாராக. ஜெபிப்போம்.

## கடவுள் - GOD


இரவு நேரத்தில் வானத்தை அண்ணார்ந்து பார்த்தால் அதில் எண்ணிலா நட்சத்திரங்கள் மின்னித் திகழ்வதைக் காணலாம். இந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்தில் இருப்பதால் சிறியவையாய்த் தோன்றுகின்றன. ஆனால் உண்மையாக அவை மிகப் பெரியவை. **சூரியன், பூமியைப்** பார்க்கிலும் 13 லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவை. ஆதலால் இப்பூமியையும்,சூரியனையும்,நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து படைத்த **ஆண்டவரின்** பெருமையை யார்தான் சொல்ல வல்லவர். பெற்ற தாய் குழந்தையிடம் எவ்வளவு அன்புடையவள் என்பதை நாம் அறிவோம். **கடவுளின்** அன்பு தாயின் அன்பைவிட கோடானகோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா? தாயைக் காணும்போது குழந்தை எவ்வளவு ஆனந்த அடைகிறது. ஆகவே தாயைவிட பலகோடி மடங்கு அதிகமாய் அன்புடைய கடவுளை நினைக்கும்போது நாம் எல்லையில்லா ஆனந்தம் அடைய வேண்டும். நம் மனம் கரைந்துருகல் வேண்டும். இந்த உடம்பு நம்மோடு எப்போதும் இருக்காது. ஒருநாள் நாம் இதை விட்டு விலகவேண்டும். அப்போது நம் பெற்றோரும், சுற்றியிருப்போரும். நண்பரும் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவர். நம் சம்பத்துகளும் பிரிந்துவிடும். உலகத்துடன் உள்ள தொடர்பு நீங்கிவிடும். கடவுள் மட்டுமே எப்போதும் எல்லையில்லா அன்புடன் நம்மோடு துணையாய் இருப்பார். ஆகவே நம்முடைய மனம் அவரையே நாடவேண்டும். நம் வாழ்வுக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும்போது நமது நாட்டம் அவற்றிலே செல்லுமாயின் நமது மனம் எப்போதும் ஆண்டவரிடத்தில் இருத்தல் வேண்டும்.

# சாட்சியில்லா ஓய்வுபெற்ற CSI மாடரேட்டர் - பிஷப்மாரின் முடிவு:

**CSI கன்னியாகுமரி டையோசிஸ் பிஷப்பும், முன்னாள் மாடரேட்டரும் ஓய்வுபெறும் வயது 65லிருந்து 67ஆக மாற்ற முக்கிய காரணமானவருமான Most.Rev.தேவகடாட்சம் அவர்கள் ஓய்வுபெற்றார்.**



இந்த செய்தியை **சந்தோஷ செய்தியாக** ஒருவருக்கொருவர் பகிர்ந்துக்கொண்டதாக **கன்னியாகுமரி CSI** டையோசிஸ்ஸில் சில இடங்களில் கூறிக்கொண்டார்கள் என அறிந்தேன். அங்கு பல இடங்களில் காணப்படும் **வால் போஸ்டர்கள், துண்டுபிரதிகள் இனிப்பு** வழங்குதல் மூலமாக **பிஷப்பின் பிரிவு** பலருக்கு நிம்மதியளிப்பதுப்போல தோன்றுகிறது.



ஒரு ஆயர் கூறினார்: **பிஷப்** எப்போ **பதவியை விட்டுவிலகுவார்** என்று காத்திருந்த எங்களுக்கு பெருத்த நிம்மதி உண்டாயிற்று என்றார்.

**இப்போதுள்ள CSI மாடரேட்டரும், மத்திய கேரளா டையோசிஸ் பிஷப்புமான Most.Rev.Thomas K.Oomman(தாமஸ் கே.உம்மன்)** அவர்கள், **பிஷப்.தேவகடாட்சம்** அவர்களின் பிரிவு உபச்சாரத்தில் கலந்துக்கொள்ளவும், கன்னியாகுமரி டையோசிஸ் பொருப்பை **பிஷப்பாக** ஏற்றெடுக்கவும் **மாடரேட்டர்** நாகர்கோவில் நகருக்கு வருகை புரிந்தார். இரண்டு **பிஷப்புகளின் படங்கள் ஆளுயிர பிளக்ஸ் போர்டுகளில்** வழி நெடுக காட்சியளிக்க, எல்லா தினசரி பேப்பர்களில் பிஷப் அவர்களின் பிரிவு உபச்சாரவிழா என்ற அறிவிப்பை **ஒருபக்க விளம்பரங்களாக** வெளியிட்டனர்.

ஆனால் அத்தனை ஏற்பாடுகளும் வீண் ஆயின. **பிரிவு உபச்சார விழாவுக்கு** நான் வர விருப்பமில்லை என்று **பிஷப்.தேவகடாட்சம்** அவர்களே அறிவித்துவிட்டார்.

பிரிவு உபச்சார விழாவில் அவரின் **ஊழல் பட்டியலை** வாசிக்க சிலர் மறைமுகமாக ஏற்பாடு செய்திருப்பதாக செய்திகள் **பிஷப்** காதில் விழ, பிரிவு உபச்சாரத்தில் தான் வெகுவாக அவமதிக்கப்படுவோம் என்று எதிர்ப்பார்த்தார். **எதிர்ப்பு ஆயர்கள்** ஒருபக்கம் அவரை பயமுறுத்தவும், பிஷப் **ஆதரவு ஆயர்கள்** மறுபக்கம் அவரை உற்சாகப்படுத்தவும் காத்திருந்தனர்.

இவர்களுக்கு இடையில்தான் அகப்படாமல் இருக்க **பிஷப்** அவர்கள் தன் மருமகள் வீட்டில் தங்கிவிட்டார். **மாடரேட்டர்** அவர்கள் பிஷப் தங்கியிருக்கும் **மருமகளின்** வீட்டுக்கே நேரில் சென்று அலுவலக **சம்பந்தமான கையெழுத்துகளை** பெற்று திரும்பினார். **பணத்தை** பெற்றுக்

கொண்டுதான் **பிஷப் பதவி கொடுத்தார்** என்றாலும் **மத்திய கேரளாவுக்கு** தன்னை **பிஷப்** ஆக்கியவர் என்ற **நன்றி** மாடரேட்டர் அவர்களுக்கு உண்டு. ஆகவே பிஷப் அவர்களை அவர் வீட்டுக்கே நேரில் சென்று பேசி விடைபெற்றார்.

## ஆரம்பத்தைவிட முடிவு முக்கியம்:

**முன்னாள் பிஷப்.தேவகடாட்சம்** அவர்கள் **பிஷப்பாக** தெரிந்தடுக்கப்பட்டவுடன் பெருத்த ஆராவரத்துடன் **ஆயர்களும், மற்றவர்களும்** அவரை அலக்காக துாக்கி தோளில் வைத்து அந்த அறையையே சுற்றி வந்தார்கள். அதை நானும் வீடியோவில் அப்போது கண்டேன்.

**ஆனால்,**

**பிஷப்** அவர்களின் **பதவி காலம் முடிவு வெறுப்பும், கசப்பும்** கலந்த **முடிவாக** அமைந்தது. இவர் மாடரேட்டர் பதவியிலிருந்தபோது ஒவ்வொரு டையோசிஸ்ஸிலும் **பிஷப்** தெரிந்தெடுப்பில் மிகப்பெரிய ஊழல் நடத்தியதை இனி அவர் நினைத்து பார்ப்பார் என்று சிலர் கூறுகிறார்கள். சொத்துக்கள் பணம் வேண்டிய அளவு பிஷப் அவர்கள் சேர்த்துவிட்டார் என்று கூறுகிறார்கள்.

ஆகவே **கோயமுத்துார்** முன்னாள் **பிஷப்.துரை** அவர்கள் இப்போது அனுபவிக்கும் **பண கஷ்டம்** இவருக்கு இருக்காது. ஆனால் குற்ற உணர்ச்சியால் மிகவும் மனபாதிப்பு இவருக்கு உண்டாகும். அது மனந்திரும்புதலுக்கு ஏதுவாக இருந்தால் அவர் ஆத்துமாவுக்கு நல்லது.

■ இப்படி **சபை அல்லது டையோசிஸ்** அல்லது **ஊழிய பணத்தில் ஊழல் செய்பவர்கள் ஆயர்களானாலும்** அல்லது **பிஷப்** அல்லது **மாடரேட்டரானாலும்** அல்லது டையோசிஸ் சபை **நிர்வாகிகளானாலும்** அவர்களின் முடிவு **ஆசீர்வாதம் இழந்து சமாதானம்** இழந்து சொந்த வீட்டாரின் அன்பையும்,மரியாதையும் இழந்து நிம்மதியற்ற வாழ்க்கைத்தான் அவர்கள் வாழ்க்கை முடிவாக இருக்கும்.

**சேர்த்து வைத்த பணம், சொத்து** இருக்கும்.

ஆனால் அதில் **ஆசீர்வாதம் இருக்காது.**

**நம்முடைய பணம் சபையில் அல்லது டையோசிஸ்ஸில் இருக்கலாம்.**

ஆனால் **சபை பணம்** அல்லது டையோசிஸ் **பணம் நம்மிடம் இருக்கக்கூடாது.**


அது மக்கள் **ஜெபித்து** ஊழியத்துக்காக காணிக்கை பையில் அல்லது பெட்டியில் இடப்பட்ட பணம் அதை கையாடல் செய்து **தேவ தண்டனையை** பெற்றுதரும். எச்சரிக்கை!. இப்போது உள்ள ஆயர்கள்,பிஷப்மார்கள்,மாடரேட்டர் இவர்களுக்கும் இது பொருந்தும். எச்சரிக்கை!. ஜாக்கிறதை!.

■ **கன்னியாகுமரி** CSI டையோசிஸ்க்கு கர்த்தர் **கறைப்படியாத தெய்வ பயமுள்ள பிஷப்** தெரிந்தெடுக்க **கர்த்தர் அனுமதிக்கவேண்டும்** என்று கன்னியாகுமரி டையோசிஸ் சபை மக்கள் கூடி ஜெபிப்போம்.

என்னை ஒரு **பிரசங்கியாக** அறிமுகப்படுத்தியது **கன்னியாகுமரி CSI டையோசிஸ்** ஆகும். கன்வென்ஷனில் பிரசங்கிக்க **முதன்முதல் அழைப்பு** எனக்கு கன்னியாகுமரி CSI டையோசிஸிலிருந்து தான் வந்தது.

அதனால்தான் இன்றுவரை அந்த டையோசிஸ்க்கு நன்றி உள்ளவனாகவும்,பாரம் கொண்டவனாகவும் இருக்கிறேன். ஆகவேதான் மனபாரத்துடன் இதை எழுதுகிறேன். இப்படிப்பட்ட நிகழ்வுகள் இப்போது பதவியிலிருக்கும் **மாடரேட்டருக்கும்** மற்ற எல்லா டையோசிஸ் பிஷப்மார்களுக்கும் ஒரு பாடமாக அமையட்டும்.ஜெபிப்போம்.

# உலக பிரசித்திப்பெற்ற உண்மை ஊழியர் Dr.பில்லிகிரஹாம்






டாக்டர்.**பில்லிகிரஹாம்** அவர்கள் தன் **ஊழிய ஓட்டத்தை (21.02.2018) வெற்றிகரமாக** முடித்து கர்த்தரின் கையில் தன் ஆவியை சகல ஆயத்தத்தோடும் முடித்து ஒப்புக்கொடுத்தார்.

உலகத்திலேயே எந்த **ஜனாதிபதிக்கும்,நடிகருக்கும், பாடகர்களுக்கும்** வராத கூட்டம் குறிப்பாக, இவருக்கு மட்டுமே வந்ததாக கின்னஸ் சாதனை அறிக்கை கூறுகிறது.

இவர் **சுகமளிக்கும்** கூட்டம் நடத்தவில்லை, **அற்புத சாட்சிகள்** எதுவும் மேடையில் காண்பித்ததில்லை. **அந்நியபாஷை** பேசியதில்லை, **அக்கினி அபிஷேகம்** என் கூட்டத்தில் கிடைக்கும் என்றோ, **சாபங்கள்** நீங்கும் என்றோ,**குருடர்** பார்வையடைகிறார்கள்,**முடவர்கள்** நடக்கிறார்கள், உங்கள் **துக்கம் சந்தோஷமாக** மாறும். **பிசாசு** கட்டுகள் நீங்கும், **பில்லிசூனியம்** எடுக்கப்படும் என்றோ ஒரு விளம்பரம்கூட இவர் பேசும் கூட்டத்துக்கு வெளியிடும் விளம்பரத்தில் அழைப்பு நோட்டீஸ்ஸில் வெளியிட்டதில்லை.

ஆனால் இவர்கள் **யாருக்கும் வராத ஆள்கூட்டம்** மில்லியன் கணக்கில் டாக்டர்.**பில்லி கிரஹாம்** அவர்களுக்கு மட்டுமே கூடியிருக்கிறது என்று உலக பிரசித்திப்பெற்ற LIFE பத்திரிக்கை கணக்கெடுப்பு நடத்தி அது **கின்னஸ்** சாதனையாகவும் இடம் பெற்றுள்ளது என்றால் **டாக்டர்.பில்லிகிரஹாம்** அவர்களின் பிரசங்கத்தில் **என்ன கவர்ச்சியிருக்கிறது?.** அவரின் பரிசுத்தமான வாழ்க்கை, பண விஷயத்தில் உண்மை, வசனத்தைவிட்டு இப்படியும்,அப்படியும் விலகாமல் **சுத்த சுவிசேஷ பிரசங்கம்.** சுருக்கமான செய்தி- எந்த பிரசங்கம் செய்தாலும் பிரசங்க முடிவை **சிலுவையில்** கொண்டு வந்து நிறுத்துவார். இப்படிப்பட்ட சாட்சியின் ஜீவியத்தோடு இவர் பிரசங்கிக்கும்போது **வசனம்** மிக வல்லமையாக **மக்களை தொடுகிறது.**

இவர் பிரசங்கத்தில் இவர் அழுவதில்லை. அழுவதுபோல நடித்து மக்களை அழவைப்பது மில்லை. அந்த நடிப்பு நம் தமிழ் ஊழியர்களுக்கு குறிப்பாக தம்பி.**பால்தினகரன்**,சகோ.**ஸ்டீபன்** இவர்களுக்கொல்லாம் கை வந்த கலையாகும்.

ஆனால் பில்லி பிரசங்கத்தில் மக்கள் உணர்த்தப்பட்டு ஜெபத்தில் உண்மையாக உள்ளம் நொருக்கப்பட்டு பாவத்துக்கு மனஸ்தாபட்டு அழும் அழுகையைத்தான் நாம் இவர் கூட்டத்தில் பார்க்கமுடியும். **எனக்கு சுகம் தாரும், என்னை தொடும் ஆண்டவரே, என் கடனை தீர்த்தருளும் ஆண்டவரே, என் கட்டுகள் நீக்கும்** என்று ஜெபத்தில் அழ சொல்லமாட்டார். நம் ஊழியர்கள் கூட்டத்தில் கலந்துக்கொள்ளும் மக்களை அழவைத்து அதை வீடியோ எடுத்து உலக மக்கள் வேடிக்கை பார்க்க தானும் அதை கண்டு ரசிக்கும் கொடூர யுக்தி பில்லி கூட்டத்தில் காணமுடியாது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால்,இவர் செய்யும் ஊழியம் இவர் ஆரம்பித்தது. இவரின் சொந்த ஊழியத்தில் **காணிக்கை** இவருக்காகத்தான் மக்கள் அனுப்புகிறார்கள். ஆனால் இவர் ஸ்தாபனத்தில் மற்ற ஊழியர்கள் **சம்பளம்** பெறுவதுபோல் இவருக்கென்று இவர் ஸ்தாபன Bபோர்ட் தீர்மானித்த **சம்பள** பணத்தை வாங்கிதான் **தன் மரணம்வரை** தன் குடும்பத்தை நடத்தினார் என்றால் நம்பமுடிகிறதா?. ஆனால் பெரும்பாலான ஊழியர்கள் ஊழியத்திற்கு என்று அனுப்பும் பணத்தில் விலையுர்ந்த கார்களை வாங்கியும் அரண்மனைப்போன்ற வீடுகள் பணிந்தும் சுகம் அனுபவிக்கிறார்கள்.

இன்று **சிஎஸ்ஐ டையோசிஸ்** நடத்தும் மிஷனரி ஸ்தாபனத்தின் பொது செயலர்களும், **பிஷப்மாரும்** வைத்திருக்கும் கார்கள் யாவும் சினிமா நட்சத்திரங்கள் பவனிவரும் 40 லட்சம் 60 லட்சம் விலையுள்ள கார்கள் ஆகும். அந்த கார் ஒரு லிட்டருக்கு 6 கிலோ மீட்டர் துாரம்தான் போகும். இந்த ஆடம்பர கார்களில் **வட இந்தியாவரை** பயணம் செய்பவர்கள் உண்டு. காருக்கு பெட்ரோல் செலவு எத்தனை லட்சம் ஆகும். பெட்ரோல் செலவை டையோசிஸ் அல்லது **மிஷனரி ஸ்தாபன கணக்கில்** எழுதி பெற்றுக்கொண்டு அதோடு நில்லாமல் வடஇந்தியாவில் சந்திக்க போகும் **ஏழை மிஷனரிகளிடமும்** தான் வந்துபோனதற்கும் கார் பெட்ரோல் பில்லுக்கும் **பணத்தை பிடுங்கும் இவர்களெல்லாம் ஊழியர்களா? அங்கி அணிந்த பிணம் தின்னி கழுகுகளா? ஏழை மிஷனரிகளிடமே பணம் சுரண்டி ஜீவிக்கும் மனசாட்சியில்லாத ஜென்மங்கள்** இன்னும் இவர்களை எப்படி கூறுவது?

■ **பில்லிகிரஹாம்** அவர்களுக்கு 3 பெண் பிள்ளைகள், 2 ஆண் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் உண்டு.

ஊழியக்காரர்களின் குடும்பத்தில் ஊழியருக்கு **தலைவலி** உண்டாக்க குடும்பத்தில் யாராவது ஒருவர் அல்ல இருவர் இருப்பார்களே!. சில குடும்பங்களில் மகன் சாட்சியிழந்திருப்பார். பல குடும்பங்களில் மருமகள் சாட்சியிழந்து குடும்பத்துக்கு வேதனையை உண்டாக்குவார்கள்.

LEF **லேமேன் இவாஞ்சிலிக்கல் பெல்லோஷிப்பில்** சகோ.**ஜோவின்** ஒரு மகள் மட்டும். ஜோக்கு தலைவலி கொடுத்தவர். பல திருமணம் செய்து விவாகரத்து பெற்றவர்.

அப்படியே **பில்லிகிரஹாம்** குடும்பத்திலும் மூத்தமகள் **வெர்ஜினா** 46 வயது உள்ளவள். இரண்டு முறை **விவாகரத்து** செய்து இப்போது **விவாகம்** இல்லாது மனந்திரும்பி ஊழியத்தில் பொருப்பு ஏதும் எடுக்காது ஊழியத்திற்கு உதவியாக மட்டும் இருக்கிறாள். தகப்பனர் பில்லிகிரஹாம் அவளை வெறுத்து ஒதுக்காமல் அவர் மனந்திரும்பி இனி வேறு யாரையும் திருமணம் செய்யாது இப்படியே இருந்துவிடுகிறேன் என்றதால் குடும்பத்தில் சேர்த்து கொண்டார். அவளை ஊழியத்தில் முன்னிலைப்படுத்ததால் பில்லி ஊழியம் பாதிக்கப்படவில்லை.

இவளைத்தவிர மற்ற **பிள்ளைகள்,மருமக்கள்** யாவரும் மிக அற்புத சாட்சி பெற்றவர்கள். இந்த ஐந்து பிள்ளைகளில் மகள் Ms.Ann Graham மிகச்சிறந்த **பைபிள் ஆசிரியை** ஆவார். பில்லிகிரஹாமைவிட மிக நன்றாக **ஆழமாக பிரசங்கம்** செய்பவர். இவர் பிரசங்கத்தை நானும்

நேரிடையாக கேட்டிருக்கிறேன். அற்புதமான எழுத்து தாலந்து மற்ற மகள் **ரூத்கிரஹாம்**, ஆண் பிள்ளைகள் **பிராங்கிளின்**(வயது 53), **நெல்சன்கிரஹாம்**(வயது 53)இவர்கள் பில்லிகிரஹாம் அவர்களின் ஊழியத்தையும்,உலகளவில் ஊழிய ஸ்தாபனத்தையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மகன் **பிராங்கிளின்** உலகம் முழுவதும் உள்ள ஏழை நாடுகளில் **அனாதை இல்லம், வயது முதிர்ந்தோர் கைவிடப்பட்டவர்களுக்கான வீடுகள்** அமைத்து உதவும் ஊழியம் செய்கிறார். **நெல்சன்** அவர்கள் **சீனா** போன்ற தேசங்களுக்கு அவர்கள் மொழியில் வேதாகமம் அனுப்புவது போன்ற ஊழியம் செய்கிறார்.

■ **டாக்டர்.பில்லிகிரஹாம்** அவர்கள் **பிரஸ்பிட்டிரியன் சபை** அங்கத்தினராவர். ஆனால் இவர் **பாப்டிஸ்ட்** சபையில்தான் பாஸ்டர் ஊழியம் ஆரம்பித்தார்.

Youth For Christ என்ற உலக பிரசித்திப்பெற்ற இயக்கத்தின் முதல் முழுநேர ஊழியர் **டாக்டர்.பில்லி கிரஹாம்** அவர்கள்தான். இதன்பிறகு **BEA** என்ற தனி ஊழிய ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். BEA என்றால் **பில்லிகிரஹாம் நற்செய்தி கூட்டு ஸ்தாபனம்** என்பதாகும்.

**பில்லிகிரஹாம்** ஆரம்பித்த முதல் பத்திரிக்கை(Decision) என்ற ஆங்கில பத்திரிக்கை ஆகும். இந்த பத்திரிக்கைக்கு **உலகமெங்கும் வாசகர்கள்** உண்டு. 1964,1965 வருடங்களில் நானும் அந்த **பத்திரிக்கையின் சந்தாதராக அந்த பத்திரிக்கையை தபாலில் பெற்று** வாசித்தேன்.

TV காலம் தொடங்கியவுடன் **The Hour of Decision** என்ற பெயரில் இவரின் செய்திகள் தொடர்ந்து அந்த டிவி சேனலில் வந்தது. **சினிமாவையும் தன் ஊழியத்துக்கு** பயன்படுத்தி **World Pictures** என்ற பெயரில் நீதிபோதனைகள் சம்பவங்களைசினிமா படமெடுத்து வெளியிட்டார். எப்படியெல்லாம் இயேசுவை அறிவிக்க முடியுமோ, அதற்காக எல்லாவித **ஊடகங்களையும்** தன் ஊழியத்துக்காக பயன்படுத்திக் கொண்டார்.

**Christianity Today - இன்றைய கிறிஸ்தவம்** என்ற பெயரில் மற்றொரு பத்திரிக்கையையும் தொடர்ந்தார்.

**Trans World Radio -** என்ற **பிரபல வானொலி ஊழியத்தை** தொடங்கியவரும் இவரே ஆவார்.

**Campus Crusade for Christ -** என்ற **பிரபல ஊழிய ஸ்தாபனத்தை** நிறுவியவரும் இவரே ஆவார்.

**Good Samaritan Purse -** நல்ல **சமாரியனின் மணிபர்ஸ்** என்ற வித்தியாசமான பெயரில் உதவி ஸ்தாபனத்தையும் தொடங்கி இன்றும் வெற்றியுடன் நடைபெறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதிகள் எல்லாரும்(**ஒபாமா** அவர்களைத்தவிர) **பில்லிகிரஹாம்** அவர்கள் **ஜெபம் செய்த பின்தான் பதவி பிரமாணம்** எடுத்துக்கொண்டார்கள். **ஒபாமா** பதவி பிரமாணம் எடுத்தபின் உடல்நலம் இல்லாதிருந்த பில்லியை அவர் வீட்டுக்கே சென்று ஜெபித்துக்கொண்டார். **அமெரிக்கா** முழுவதுக்கும் **ஆவிக்குரிய தந்தையாக** மக்களாலும், அரசியல்வாதிகளாலும் மதிப்பு பெற்றவர். ஒரு கட்டத்தில் பில்லிகிரஹாமை **அமெரிக்க ஜனாதிபதியாக நியமிக்க** கட்டாயப்படுத்தினார்கள். என் **அழைப்பு ஆள்வதற்காக அல்ல, கிறிஸ்தவுக்கு ஊழியம் செய்வதற்காகவே** என்றார். வருமானம் உண்டாக்கும். எந்த தொழிலிலும் தலையிடமாட்டேன். என் பிள்ளைகளையும் அப்படியே கேட்டு கொண்டிருக்கிறேன் என்றார்.

ஆனால் **சகோ.D.G.S.தினகரன்** அவர்கள் ஊழியத்தை விட்டுவிலகி தன் மகனுக்காக **காருண்யா** என்ற கல்வி ஸ்தாபனத்தை தொடங்கி தெய்வத்தைவிட்டே விலகினதால் **மகளை**

இழந்தார். தன் ஆத்துமாவையும் இழந்தார். அதற்காக **பொய் பேசி பணம் சம்பாதிக்கும் நிலையும் அவருக்கு** ஏற்பட்டு **இந்துமத தலைவர்களின்** காலில் விழும்நிலை **சகோ.தினகரனுக்கு** ஏற்பட்டு நம் தெய்வத்தை மிகவும் துக்கப்படுத்திவிட்டார்.

**டாக்டர்.பில்லிகிரஹாம்** பற்றி எழுதும்போது **தமிழ்நாட்டு ஊழியர்கள்** ஒப்பிட்டு பார்த்து வாசகர்கள் தங்களை சரிப்படுத்தி கொள்ளவேண்டும் என்பதற்காக இதை எழுதினேன்.

**டாக்டர்.பில்லிகிரஹாம்** ஏறக்குறைய 100 **வயதை நெருங்கும்போது** 2018 **பிப்ரவரி 21ம் தேதி** கர்த்தரின் பாதத்தில் நித்தியத்துக்குள் பிரவேசித்தார்.

வித்தியாசவித்தியாசமான உபதேசங்களில் உள்ள **அனைத்து சபையினராலும்** மதிக்கப்படுவர் **டாக்டர்.பில்லிகிரஹாம்** அவர்கள் ஆகும்.

உலகமுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் **முன்மாதிரியாக வாழ்ந்தவரும், யாராலும் குற்றம் சாட்டப்படாதவருமாக** வாழ்ந்து மரித்த **டாக்டர்.பில்லிகிரஹாம்** அவர்களுக்காகவும், **தொடர்ந்து நடைபெறும்** அவருடைய **ஊழியங்களுக்காகவும்** நாம் யாவரும் தேவனை துதிப்போம். அவருடைய ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## ONLINE BANKING

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :** வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**
**A/c No. 10764116842, Swift code: SBININBB637**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**
**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**
**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**
**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**
**MICR CODE: 636015005.**

## என் தொலைபேசி:

கூடியவரை என்னோடு கடித தொடர்பு அல்லது இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ள முயலுங்கள். என் தொலைபேசி தொடர்பு செவ்வாய்,புதன் ஆகிய நாட்களில் லைன் கிடைப்பது கடினம். அதனால் நான் தொலைபேசியை உபயோகிப்பதேயில்லை என்று நினைத்து சலித்துக்கொள்கிறார்கள். பலருக்கு கோபமும் உண்டாகிறது. பகலில் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும்போதும் மற்றவர்களுடன் இணைந்து ஜெபிக்கும்போதும் போனை எடுத்து கீழே வைத்து விடுகிறேன். இதுதான் உண்மையான பிரச்சனை வேண்டுமென்றே நான் போனை துண்டிப்பதில்லை.

# வெளிநாடுகளில் என் ஊழியங்கள்:

## குவைத் - KUWAIT :

நாள் : 2018 ஏப்ரல் 26, 27 மற்றும் 28ம் தேதி வரை மட்டும்
இடம் : St. Johns Tamil Church
தொடர்புக்கு Mr.Selvin MuthuNayagam,
CSI Church Secretary, Mob.: +965 99840794

## சுவிஸ்லார்ந்து- SWISSERLAND

நாள் : **2018 May, 1, 2 & 3**
தொடர்புக்கு: **Mr. RITA,** Mob.: 0763853103
**SWISS (St. Gallen)** நாள் : **2018 May, 4, 5 & 6**
தொடர்புக்கு: **Bro. David,** Mob.: 0796481276

## ஜெர்மனி- GERMANY

**Hermann Albert STR)** நாள் : **2018 May, 10,11,12 & 13**
தொடர்புக்கு: **Mr. Dominic,**Mob.: 0211287991

## இத்தாலி - ITALY (Roma)

நாள் : **2018 May, 17, 18, & 19**
தொடர்புக்கு: **Bro. Aruldas** Mob.: 03299636573

**குறிப்பு :** மேற்கண்ட நாடுகளில் உள்ள விசுவாசிகள் என்னை நேரில் காணவோ, ஆலோசனை, ஜெபத்துக்கு ஒவ்வொரு நாட்டிலும் கூட்ட ஏற்பாடுகள் செய்யும் அந்தந்த நாட்களில் மேலே குறிப்பிட்டிருக்கும் நபர்களில் கைபேசி எண்களில் தொடர்புக்கொண்டு அவர்கள் குறிப்பிடும் நேரங்களில் என்னை நேரில் சந்தித்து ஜெபிக்கவும், கதைக்கவும் உங்களுக்கு நேரம் ஒதுக்குவார்கள்.

## E-mail

ஜாமக்காரன் மாதம் வரவில்லை என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் பழைய விலாசத்தையும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட நம்பரையும், **தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழு விலாசத்தையும் மனதில் வைத்துக்கொள்ள முடியாது. உங்கள் புது விலாசத்தை தெளிவாக குறிப்பிடுங்கள். ஆகவே இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன். புது விலாசம் எழுதி அறிவித்த e-mailக்கு அல்லது கடிதத்துக்கு உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் புது விலாசத்தில் அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் தொலைபேசி எண்ணையும் மறக்காமல் குறிப்பிடுங்கள். காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில் உடனே அறிவிப்பேன்.

# KARNATAKA CSI CENTRAL DIOCESE
# BANGALURU(J.C.NAGAR) CSI CONVENTION
# CSI CHRISTHU JEEVA JYOTHI CHURCH




கர்நாடகா மத்திய CSI டையோசிஸ் **பெங்களூரில்** உள்ள **J.C. நகர்** என்ற இடத்தில் உள்ள கிறிஸ்து ஜீவ ஜோதி CSI ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

சபை ஆயர். Rev.JOHN PETER, அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். **சபை கமிட்டியினர்** மிஷனரி பாரம் உள்ளவர்களும் ஜெபிக்கிறவர்களுமாயிருந்ததால் கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

**Dr.பில்லிகிரஹாம் அவர்கள் எழுதிய புத்தகத்தில் உள்ள வாசகங்கள்:**

**‘ எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும் முதலாவது தன் உள்ளத்தில் கர்த்தருக்கு இடம் கொடுக்கவேண்டும்.**

**‘ இரண்டாவது சொந்த குடும்பத்துக்கு இடம் கொடுக்க வேண்டும்.**

**“ மூன்றாவதுதான் ஊழியத்துக்கு இடம்கொடுக்க வேண்டும். அவர் ஊழியத்தை மூன்றாம் இடத்தில்தான் வைக்கப்படவேண்டும் என்று எழுதியுள்ளார். இது டாக்டர்.புஷ்பராஜாகிய என் ஆரம்ப வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. ஊழியம் என்று சொல்லி சொந்த குடும்பத்தை கவனிக்காமல் ஊழியத்திற்கு அலைந்துக்கொண்டிருக்கும் ஊழியக்காரர்களுக்கும்,ஆயர்களுக்கும் இந்த ஆலோசனை பிரயோஜனமாக இருக்கும். அதனால்தான் பவுல் கூறுகிறார்: தன் சொந்த குடும்பத்தை சரியாக நடத்தவன் சபையை எப்படி நடத்துவன். 1 தீமோ 3:5.**

# KARNATAKA CSI DIOCESE
# BANGALURU(JAYA NAGAR) CSI CONVENTION
# CHRISTHU ALAYA CSI CHURCH










கர்நாடகா CSI டையோசிஸ் **பெங்களூரில்** உள்ள **ஜெயா நகர்** என்ற இடத்தில் உள்ள கிறிஸ்து CSI ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

வசனங்களின் விளக்கத்தை இத்தனை தெளிவாக விளக்கி கூறியதை நாங்கள் எந்த பிரசங்கியாரிடத்திலும் கேட்டதில்லை. கர்த்தர் உங்களுக்கு கொடுத்த தாலந்துக்கு கர்த்தரை துதிக்கிறோம் என்று சபை மக்களில் சிலரும், ஆயரும் என்னிடம் கூறியது என் ஊழியத்தை ஊக்குவிப்பதாக இருந்தது. கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.

சபை ஆயர். Rev.(Mrs.).DASSAN அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். **சபை கமிட்டியினர்** மிஷனரி பாரம் உள்ளவர்களும் ஜெபிக்கிறவர்களுமாயிருந்ததால் கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

## சத்திய வசன வானொலி நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு வாரமும் **திங்கள், செவ்வாய்** ஆகிய இரு நாட்களில் Fபீபா வானொலியில் ஒலிப்பரப்பாகிறது. காலை 7-00 மணிக்கு மத்திய அலை வரிசையில் MW 873 khz மீட்டரில் ஒலிப்பரப்பாகிறது.

# TIRUNELVELI DIOCESE (A UNIT OF TDTA)
# GANDHI NAGAR CONVENTION





**திருநெல்வேலியில் உள்ள காந்தி நகர்** TDTA ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் மிகவும் பெருத்த ஆசீர்வாதமாக அமைந்தது. சபை மக்கள் அனைவருமே வசனத்தின்படி ஜீவிக்க ஆசை உள்ளவர்கள் என்பதை அறிந்தேன்.

அவர்கள் வசனத்தை கேட்கும் விதம் மணிக்கணக்கில் யாரும் எழுந்துபோகாமல் பிரசங்கத்தை கவனித்த விதம் என்னை மிகவும் உற்சாகமடைய செய்தது.

கடந்த என் 52 வருட ஊழியத்தில் என் பிரசங்கத்தை கேட்ட சபைகளில் சபை நிர்வாகிகள் எலக்ஷன் முறையில் **தெரிந்தெடுக்காமல்** விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில் **தெரிந்தெடுப்பு முறையில்** நிர்வாகிகளை சபை மக்கள் ஏற்படுத்தியது. மொத்தம் 17 சிஎஸ்ஐ சபைகளாகும்.

இப்போது காந்திநகர் சபையிலும் எலக்ஷன் கடந்த 9 வருடங்களாக இல்லை என்று கூறியது என்னை மிகவும் சந்தோஷம் அடைய செய்தது. கமிட்டியினரே என்னிடம் கூறும்போது டாக்டர் ஐயா, உங்கள் கணக்கில் எங்கள் சபையை எலக்ஷன் இல்லாத 18வது சபையாக சேர்த்துக்கொள்ளுங்கள் என்றார்கள்.

உடனே நான் நிச்சயம் மற்றவர்களுக்கு இது ஒரு மாடல் சபையாக இருப்பதை எழுதுவேன் என்றேன். அப்படியே பதிவுசெய்துவிட்டேன். தேவ நாமம் மகிமைப்படுவதாக.

இந்த சபையின் ஆயர். Rev.ASIRVATHAM,அவர்களும், நல்ல ஆவிக்குரியவராக கண்டேன். இதே முறையை திருமண்டலம் முழுவதும் நடைமுறைப்படுத்தினால் எத்தனை அருமையாக இருக்கும் என்று ஏங்கினேன். திருநெல்வேலி சபைகளுக்காக தொடர்ந்து ஜெபிப்போம். இந்த கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# AOG பாஸ்டர் மரண அறிவிப்பு:


AOG சபைகளின் **முதல் மிஷனரியாக** ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்ய புறப்பட்ட முதல் **பாஸ்டர்.மார்கோஸ்** அவர்களாகும். அவர் மாமனார் FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் ஆரம்பகால தூண்களில் ஒருவர். அந்நியபாஷை பேசாத மாமனாரைப்போல எத்தனையோ பேர், உயர் உத்தியோகஸ்தர்கள், **பெரும் பட்டதாரிகள், வியாபாரிகள்** இப்படி பலர் தன் படிப்பை உத்தியோகத்தை, வருமானத்தை துச்சமாக நினைத்து அவைகளை உதறிதள்ளிவிட்டு ஒருமுறைகூட இயேசுவைப்பற்றி கேள்விபடாத **ஆதிவாசி மக்கள்** மத்தியில் அற்புதமாக ஊழியம் நிறைவேற்றி ஆயிரக்கணக்கில் வடமாநில காடுகளில்உள்ள கிராமங்களில் **சபைகளை உருவாக்கி** எழுதபடிக்க தெரியாத அந்த காட்டுவாசி மக்களை இயேசுவின் பாதத்தில் கொண்டு வந்து சேர்க்கும் பணிகளை நிறைவேற்றும்போது, CSI மற்றும் லூத்தரன் சபைகளைவிட விசேஷ தகுதியாக **பெந்தேகோஸ்தே** சபையினரல் கருதப்படும் **அந்நியபாஷை** பேசும் நாம் ஏன் **ஆதிவாசிகள்** மத்தியில் மிஷனரிகளாக போகக்கூடாது என்று முதல் முயற்சி செய்தவர்தான் **பாஸ்டர்.மார்கோஸ்தேவசகாயம்** என்பவராகும்.



சேலத்தில் முதல் AOG சபை கால் ஊன்றிய காலம் அது. முதல் பாஸ்டராக **சேலம்** மாநகரில் **அழகாபுரம்** என்ற இடத்தில் ஒரு வாடகை வீட்டில் புதிய AOG சபையை தொடங்கினார். அவர் சேலத்தில் AOG சபையை ஆரம்பிக்க ஆரம்ப காலத்தில் உதவி செய்தவர்களில் நானும் ஒருவன் ஆகும். அந்தகால சூழ்நிலையில் சேலத்தில் உள்ள **சிலோன் பெந்தேகோஸ்தே சபை** உடைந்து **புது IPC சபை** சேலத்தில் டையர்(TYRE) கம்பெனி முதலாளிகள் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இவைகள் இரண்டு சபைகளும் உடைந்து சிதறிய 10 அல்லது 15ஆத்துமாக்களை வைத்து உருவாக்கப்பட்டதுதான் சேலத்தின் முதல் AOG சபை. பாஸ்டர்.**மார்கோஸ்க்கு** நல்ல **பாடும் தாலந்தும்,பிரசங்க தாலந்தும்** உண்டு. மட்டுமல்ல, உண்மையாக மனம்திரும்பின அனுபவமுள்ளவர். அதனல்தான் மிஷனரிபாரமும் அவருக்குள் உண்டானது. தன் மிஷனரி தாகத்தை என்னுடன் பகிர்ந்துக்கொண்டு AOG தலைவருக்கும் அறிவித்தார். வடஇந்திய மாநிலத்தில் எந்த மலைக்கு சென்று மிஷனரி ஊழியம் தொடங்குவது என்று அறியாதிருந்தபோது, நான் குஜராத்தில் **வகை** என்ற FMPB பணிதளத்துக்கு மருத்துவ முகாம், சுவிசேஷ ஊழியத்துக்கு புறப்படுவதை அவருக்கு அறிவித்தேன். உடனே குஜராத்தில் **சூரத்** என்ற இடத்தில் அவர் நண்பர் வீட்டில் தங்கி, நான் ஊழியம் செய்த அதே காட்டுக்கு வந்துசேர்ந்தார். அங்கு FMPB மிஷனரிகள் செய்யும் ஊழியத்தை கவனித்தார். **சூரத்** பட்டிணத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கி இதே மலையில் வேறு ஒரு பகுதிக்கு நீங்கள் ஊழியம் செய்து வரலாம் என்று ஆலோசனை கொடுத்தேன். ஏற்கனவே நான் ஜாமக்காரனில் குறிப்பிட்டபடி **பெந்தகோஸ்தே சபை** உபதேசத்தில் உள்ளவர்களுக்கு காடுகளில் ஆதிவாசிகளிடையே ஊழியம் செய்யவே முடியாது. அது அப்படியே பாஸ்டர் மார்காஸ் விஷயத்திலும் உண்மையானது.

என் வாசகர்களில் சிலர் **சூரத்தில்** CNI (CHURCH OF NORTH INDIA) சபையில் **தமிழ் ஆராதனை** தொடங்கினார்கள். அந்த சபைகளிலும் விரிசல் ஏற்பட்டது. அன்றைய CNI பாஸ்டர் பிரசாங்க தாலந்து இல்லாதவர் பாடல்களும் சரியில்லை. ஆகவே பாஸ்டர்.**மார்கஸ்** ஆரம்பித்த வீட்டு சபையில் இணைந்து ஆராதித்தனர். இன்று அதே பட்டணத்தில் AOG சபை தனியாக உருவானது. **பாஸ்டர்.மார்கஸ்** அவர்கள் தனது 55வது வயதில் **கிட்னி இருதயம்,நுரையீரல்** ஆகியவைகள் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் 2018 பிப்ரவரி 6ம் தேதி மரணமடைந்தார். கடைசியாக தன் ஊழியத்தை **சூரத்திலிருந்து** இடம் பெயர்த்து BARODAவில் **வதோதரா** என்ற ஊரில் AOG சபை பாஸ்டராக ஊழியம் செய்து தன் ஓட்டத்தை முடித்தார்.

இவருக்கு மனைவி(ஒரு மகன் திருமணமானவர்), ஒரு மகளும் உண்டு. இவர் குடும்பத்துக்காகவும் கர்த்தர் அவர்களுக்கு ஆறுதல் கொடுக்கவும் ஜெபிப்போம்.



**DR. பில்லி W.F கிரஹாம் அவர்களின் அற்புத சாட்சியுள்ள மரணம்:**

**வாழ்கையே சாட்சி - வாழ்ந்ததும் சாட்சி**

உலகிலுள்ள வித்தியசமான அனைத்து உபதேசங்கள் நிறைந்த குறிப்பாக **அன்னியபாஷை** என்ற பெயரில் உளரும் அனைத்து சபை தலைவர்களும் வாழ்த்தும் மரிக்கும் உலகில் ஒரே ஒரு ஊழியன் **Dr. பில்லிகிரஹாம்** அவர்கள் ஆகும்.

சகோதரன் அவர்கள் மரிக்கும் சில மாதங்களுக்கு முன் **பில்லிகிரஹாம்** அவர்கள் கூறிய பொன்மொழி வார்த்தை: பில்லியாகிய நான் மரித்துவிட்டேன் என்று யார் கூறினாலும் நம்பாதேயுங்கள், காரணம் **நான் என் அப்பாவின் வீட்டுக்குதான் சென்றிருக்கிறேன்.**

**என் வீட்டு விலாசம் மட்டும் மாறியிருக்கும்.......** இப்படி கூறி மரித்த இந்த தேவதாசனின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு இமயத்தைவிட உயர்ந்தது. அவர் சாட்சியுள்ள வாழ்க்கைக்காக **பணஆசையில்லா** ஊழியத்துக்காக, அவரின் சுத்த சுவிசேஷ ஊழியங்களுக்காக தேவனை துதிப்போம். ஜாமக்காரன் வாசகர்களுடன் நானும், என் குடும்பமும் அன்னாரின் உண்மையுள்ள ஊழியத்துக்கு தலைவணங்கி வாழ்த்து கூறுகிறோம். **- டாக்டர்.புஷ்பராஜ்**

**APRIL 2018**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.